சுண்டுக்குளி கிளை நூலகம்

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆவணி 20 துல்ஹஜ் 19 இதழ் 207
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 5-9-1985

● திருமலைச் சம்பவம்:

## ஜனாதிபதி-டிக்ஸிற் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவை இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்று மாலை சந்தித்து திருகோணமலை சம்பவம் குறித்து உரையாடினார்.

நேற்று திருகோணமலையில் நிகழ்ந்த வன்செயல்கள் குறித்து கவலை தெரிவித்த திரு. டிக்ஸிற், பொதுவாக இலங்கையின் இன்றைய நிலைமை பற்றி நீண்டநேரம் ஆலோசனை நடத்தினார்.

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் தாம் தொடர்ந்து ஆர்வம் காட்டி வருவ

(5-ம் பக்கம் பார்க்க)

● திருகோணமலையில் பதினாறு மணி நேர ஊரடங்குச்சட்டம்—

# கடை எரிப்பு! கண்ணிவெடி!

# 4000 தமிழர் அகதிகளானார்கள்!!

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று அதிகாலை முதல் இடம்பெற்ற பல்வேறு வன்செயல்களைத் தொடர்ந்து நேற்று பிற்பகல் இரண்டு மணி முதல் இன்று காலை ஆறுமணிவரை பதினாறுமணி நேர ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய சம்பவங்களைத் தொடர்ந்து நகரில் வசித்த சுமார் நாலாயிரம் தமிழர்கள் கல்லூரிகளிலும், அலுவலகங்களிலும் அகதிகளாகத் தஞ்சம்புகுந்துள்ளனர்.

வன்முறைச்சம்பவங்களில் சிலர் பலியானார்கள். பலர் படுகாயமடைந்துள்ளனர். அதிகளவில் கடைகள், வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன.

(5ம் பக்கம் பார்க்க)

## 'சமரசப் பேச்சுக்களை படுகொலைகள் பாதிக்காது!"

### சென்னையில் 'அமிர்' கருத்து

(சென்னை)

'இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் முகமாக நடைபெறும் சமரசப் பேச்சு வார்த்தைகளை படுகொலைகள் எந்த வகையிலும் பாதிக்காது' என்று தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

திரு அ. அமிர்தலிங்கம் நேற்று சென்னையில் இதுகுறித்து கருத்து வெளியிடுகையில் இக்கொலைகளுக்கு யார் காரணம் என்று தெளிவாகப் புரிய

(5ம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடி; எண்மர் பலி!

### புனானையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்புக்கும் பொலனறுவைப் பாதையில் வெலிகந்தைக்கும் புனானைக்கும் இடையில் வீதியில் வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் இராணுவ ஜீப் ஒன்று சிக்கியதால் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 4 பேர் காயமடைந்ததாகவும் தெரியவருகின்றது.

திஸ்ஸபுர என்ற இடத்திலுள்ள ஒரு புதிய இராணுவ முகாமை நோக்கி இந்த ஜீப் டிருந்ததாகத் தெரிகின்றது.

நேற்றுக்காலை 9-30 மணியளவில் இச்சம்பவம் நடந்துள்ளது.

## 'ரெலோ' 'கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் திரு எம். ஆலாலசுந்தரம், திரு வி. தர்மலிங்கம் ஆகியோரது படுகொலைக்கும் தமது இயக்கத்துக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்று 'தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) மறுப்புத் தெரிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக 'ரெலோ' இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளது.

தமிழ்ப் பகுதியில் நடந்த

(5-ம் பக்கம் பார்க்க)

## முழு அளவில் நேற்று ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில் "விசாரணை செய் அல்லது விடுதலை செய்" என்ற கோரிக்கையை முன்வைத்துச் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் இளைஞர்களுக்கு ஆதரவாக நேற்று யாழ். மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் திறக்கப்படவில்லை. வாகனப் போக்குவரத்து நடைபெறவில்லை. கல்லூரிகளுக்கு மாண

(5-ம் பக்கம் பார்க்க)

## 4ம் கட்ட உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக மாணவர்களின் 3ம் கட்ட உண்ணாவிரதம் நேற்றுமாலை 5மணிக்கு முடித்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து 4ம் கட்ட உண்ணாவிரதம் அதேவேளை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மறைந்த தமிழ்த்தியாகி சிவகுமாரனின் தாயார் 3ம் கட்ட உண்ணாவிரதத்தை முடித்துவைத்து உரையாற்றினார். அதைத்தொடர்ந்து பல

(5-ம் பக்கம் பார்க்க)

## நேற்று நடைபெற்ற 'மாணவர் பஸ்சேவை'

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்கள் நேற்று மாணவர்கள் கட்டுப்பாட்டில் இருந்தன.

யாழ் ஆரியகுளம் சந்தியிலிருந்து யாழ் பல்கலைக் கழகத்திற்கு நேற்றுக்காலை சென்ற ஊர்வலத்தில் கலந்துகொண்ட

(5-ம் பக்கம் பார்க்க)

## இன்று பூரண ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

மறைந்த திரு. வி. தர்மலிங்கம், திரு. எம். ஆலாலசுந்தரம் ஆகியோருக்கு அனுதாபம் தெரிவித்து அஞ்சலி செலுத்துவதற்காக இன்று வியாழக்கிழமை வர்த்தகநிலையங்கள்மூடி பாடசாலைகளுக்குச் செல்லாது. சகல வாகனங்களையும் நிறுத்தி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு

(5ம் பக்கம் பார்க்க)

# 'தருமர்', 'ஆலால் பூதவுடலுக்கு மக்கள் அஞ்சலி

## இன்று இறுதி ஊர்வலம்

(கா. யோகநாதன்)

இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான முன்னாள் மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கத்தின் பூதவுடல் கந்தரோடையிலுள்ள அவரது இல்லத்திலும்; கோப்பாய் முன்னாள் எம். பி. திரு எம். ஆலாலசுந்தரத்தின் பூதவுடல் கல்வியங்காட்டிலுள்ள அவரது இல்லத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

திரு. வி. தர்மலிங்கத்தின் பூதவுடல், தமிழர் விடுதலை கூட்டணியின் உதய சூரியன் கொடியினால் நெஞ்சுக்குக்கீழே போர்த்தப்பட்டிருந்தது. தமிழ்த் தேசிய உடை அணிந்து கழுத்தைச் சுற்றி தமிழரசுக் கட்சியின் மூவர்ண சால்வை போடப்பட்டு பேழையில் வைக்கப்பட்டிருந்தது மக்கள் வரிசையாகச் சென்று அஞ்சலி செலுத்தினர்.

சுன்னாகம், இணுவில், மருதனாமடம், பகுதிகளில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

யாழ். மாவட்டசபை முன்னாள் உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவரின் முன்னாள் செயலாளர் திரு பேரின்பநாயகம், உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் கூட்டணிப்பிரமுகர்கள் யாழ் வர்த்தகசங்க செயலாளர் திரு எஸ். நமசிவாயம். மற்றும் ஆசிரியர்கள் நேற்று அஞ்சலி செலுத்தினார்கள்.

திரு எம். ஆலாலசுந்தரத்தின் பூதவுடல், தலையிலிருந்து நெஞ்சுவரை வெள்ளை 'நெற்'றினால் போர்த்தப்பட்டிருந்தது. தமிழ்த் தேசிய உடை அணிந்து கழுத்தைச்சுற்றி பட்டுச் சால்வை போடப்பட்டு, பேழையில் வைக்கப்பட்டிருந்தது. தலைமாட்டில் தீபம் எரிந்துகொண்டிருந்தது. அவ

(5-ம் பக்கம் பார்க்க)

# அரி வளம்பரம்

## தேவை

புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் தையல் கடைக்கு தைப்பதற்கும், வெட்டுவதற்கும் நன்கு அனுபவம் உள்ள பெண்கள் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். மேலதிக விபரங்கட்கு: 11-9-85க்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும். முகவரி: திருமதி சத்தியபாமா பாலகிருஷ்ணன், கே. கே. எஸ்.றோட், கோண்டாவில் மேற்கு. கோண்டாவில். 536

கரைதுறைப்பற்று
ப. நோ. கூ. சங்கம்
முல்லைத்தீவு

### பதவி வெற்றிடம்

**கணக்காளர் தரம் (104.8)**

மேற்காட்டப்பட்டுள்ள பதவிக்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் தலைவர், கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம். முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு 20-09-85 திகதிக்குப் பிந்தாமல் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

**கணக்காளர் தரம் (104 8)**

சம்பளம் ரூ. 500/- —840/-
20 X 5 —30 X 8

**தகைமை:**

அ. கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுவினரின் சுற்று நிருப இல. 108/81ல் குறிப்பிடப்படும் 9வது அலகு சம்பளத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு லிகிதர் அல்லது எண்பார்வை லிகிதர் பதவியில் 3 வருடத்திற்கு குறையாது கடமையாற்றியவர் அல்லது 10வது அலகு சம்பளத்தில் மேற்படி பதவிகள் ஏதாவதொன்றில் 6 வருடங்களுக்கு குறையாது கடமையாற்றியவர்.

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் கல்விநிலையத்தினரின் இறுதி ஆண்டு பரீட்சை சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில் நிறுவனங்களின் கணக்கு எண்பார்வை துறைகளில் மேற்பார்வை பதவியில் 2 வருடங்களுக்கு குறையாது கடமையாற்றிய அனுபவமுடையவர் அல்லது மேற்படி கல்விநிலையத்தின் இன்டர்மீடியட் பரீட்சை சித்தியுடன் அத்தகைய நிறுவனங்களின் மேற்குறிப்பிட்ட பதவிகளில் 4 வருடங்கட்கு குறையாது கடமையாற்றிய அனுபவமுடையவர்,

அல்லது

இ. கூட்டுறவு பணியாளர் உயர்தர பரீட்சை சித்தி அல்லது க. பொ. த. உயர்தர பரீட்சையில் கணக்கியல் உட்பட 3பாடங்கள் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக தொழில் நிறுவனங்களில் கணக்கியல் அல்லது எண்பார்வை துறைகளில் மேற்பார்வை பதவியில் 4 வருடங்கட்கு குறையாது கடமையாற்றிய அனுபவமுடையவர்.

வயது 25 — 45 வரை;

**குறிப்பு:**

மேற்கொண்டு இது பற்றிய விபரங்கள் தேவைப்படின் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினரின் சுற்றறிக்கை இல: 108/81 ஐ பார்வையிடவும்.

பொதுமுகாமையாளர்,
கரைதுறைப்பற்று
ப. நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு.

523

## விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் நல்ல நிலையில் உள்ள 245 தொடர் இலக்கத்தையுடைய ஒஸ்ரின் லொறி விற்பனைக்குண்டு. ஒரு கைப் பாவனையில் உள்ளது. விளம்பர இல: 544. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 544

புத்தூர் நவக்கிரி மஸ்கன் கொம்பனிக்கு அருகாமையில் இருக்கும் 43 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 20 பரப்பு பயிர் செய்யக்கூடியதாகவும் 23 பரப்பு செப்பனிடப்படாமலும் உள்ளது. தொடர்பு கொள்ளவேண்டிய விலாசங்கள்: ம. குணரத்தினம், புத்தூர் மேற்கு, நவக்கிரி. வி என் லோகநாதன். (குறிஞ்சிக்குமரன் சனசமூகநிலைய அருகாமையில்) குப்பிழான். (560)

## விற்பனைக்கு

புதிய, பழைய ஆங்கில தட்டச்சு யந்திரம் விற்பனைக்குண்டு தொடர்பு: நிர்வாகி சங்கர், J. E. C. மேல்மாடி, (சாந்தி சினிமா முன்பாக) 22, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 545

**A/L 86**
பகல் நேர வகுப்பு
ஆரம்பம்:
9–9 85

10-30: காவிகள்
11–45: நேர்கோடு

**Ravimohan**
JAFFNA
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள்கோயிலுக்கும் இடையில்) 539

## 1 வது பிறந்ததின வாழ்த்து

(5—9—1985)

செல்வி தேவலியோமி தேவச்சந்திரன்




ஏழாலை வடக்கைச் சேர்ந்த தேவச்சந்திரன் மணித் தம்பதிகளின் செல்வப் புதல்வி தேவலியோமி தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று பரிசில் மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

தேவலியோமியை பப்பா, மம்மா, ஏழாலையிலிருக்கும் அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, பாட்டி, அளவெட்டியிலிருக்கும் பெரிய மாமா, பெரிய மாமி, சாம், அற்புத மாமா குடும்பத்தினர், போல் மாமா குடும்பத்தினர், மற்றும் ஜேர்மனியில் இருக்கும் பெரியப்பா, குடும்பத்தினர், தாத்தன் சித்தப்பா, டென்மார்க்கில் இருக்கும் பெரியப்பா, பெரியவின்ரு, மதுரா. அமெரிக்காவிலிருக்கும் நிமல் சித்தப்பா குடும்பத்தினர். சிங்கப்பூரிலிருக்கும் றேய் ஆசியப்பா, குடும்பத்தினர். பரிசில் இருக்கும் றயனுச்சித்தி ஆகியோர் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர். 94

## ஓராண்டு நினைவஞ்சலி

**அமரர்சின்னையாதர்மலிங்கம்(S.S.T.)**

(முன்னாள் பிரபல காலி வர்த்தகர்)



மண்ணுலகம்:
15–10–1927

விண்ணுலகம்:
15–09–1984

திதி:
05–09–1985

மலரில் மணமாய் சேர்ந்திருந்தீர்
கனியில் சுவையாய் கலந்திருந்தீர்
எங்கள் துணையாய் வாழ்ந்திருந்தீர்

மலரினின்று மறைந்ததேனோ? மணமே!
கனியினின்று கரைந்த தேனோ? சுவையே!
எம்மினின்று பிரிந்த தேனோ? துணையே!

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள். உறவினர்கள்.

புகைவிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு. கோண்டாவில்.
05-09-85. (526)

## தேவை

5 மாடி ஆஸ்பத்திரி கட்டிட வேலைகளுக்கு அனுபவம்வாய்ந்த பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. மேசன் மார்
2. மரவேலை செய்பவர்கள் (Carpenters)
3. கம்பி வேலை செய்பவர்கள் (Bar benders)
4. கூலியாட்கள்

விரும்பியவர்கள் கீழ்க்காணும் முகவரியில் நேர்முகமாக வந்து தம்மைப் பதிவு செய்து கொள்ளவும்.

### சமக்கோன் நிறுவனம்,

165, 4–ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

பதிவு செய்துகொள்ளும் தினங்கள்;
6–ந் திகதி முதல் 10 ந் திகதி வரை (ஞாயிறு தவிர)
நேரம் காலை 9–00 மணி—மாலை 4 00 மணி வரை
(532)

## 31-வது நாள் நினைவஞ்சலி

**குலநாயகம் மகேந்திரன்**

தொழில்நுட்ப அதிகாரி
(காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை)



தோற்றம்:
18-4-1940

மறைவு:
7-8-1985

திதி (6–9–1985)

எங்கள் குடும்பத் தலைவராய் தெய்வமாய் ஒளி வீசி எம்மையெல்லாம் வழி நடத்தி திடீரென மறைந்தாலும் உங்கள் அன்பும் பண்பும் பாசமும் எங்கள் கண்முன் நிழலாடிக்கொண்டேயிருக்கிறது. அன்றைய தினம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டு பிரார்த்திக்கும் வண்ணம் வேண்டுகிறோம்;

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மற்றும் பெற்றோர், சகோதர சகோதரிகள்.

உவரப்புலம், ஆனைக்கோட்டை; (557)

## 2வது ஆண்டுநினைவஞ்சலி

**வி. கயிலாயநாதன்**

(கோண்டாவில்)



தாயின்மடியில்:
9– 5– 1950

இறைவன் அடியில்:
5–9–1983

மறைந்தும் மறையாமல் எம் இதயங்களில்
குடி கொண்டு இருக்கும் குல விளக்கே ராசா!
காலத்தின் கணக்கும் காலனின் கணக்கும்
மீற முடியாத நியதிகள் தான் ராசா
ஆனால் அகாலத்தில் அவசரத்தில்
முடிந்து விட்ட கணக்கிற்காக
காலதேவனை மன்னிக்கவே முடியாது ராசா
பெயருக்கேற்ற ஒளிரும் காந்தம்மிக்க உன்வதனம்
பளீரிட்டு புன்னகைக்கும் வசீகர முறுவல்
ஆழமான விழிகளில் தெறிக்கும் அறிவின் பிம்பம்
இவைகள் எல்லாவற்றையும் காலதேவனால்
அழிக்க முடியுமா? கண்ணே.
உம்மறைவால் வாடிவதங்கிக் கொண்டிருந்த
உன் அப்புவையும் காலதேவன் அழைத்துச்சென்று
விட்டானே ராசா
நெஞ்சிருக்கும் வரை உம் நினைவு
எம் இதயங்களில் இருந்து அகலாது கண்ணே
நாள்தோறும் நாம் வடிக்கும் கண்ணீர்
உமது ஆத்மா சாந்தியடைய உதவட்டும்
எம் ஆருயிரே.

உம் மறைவால் வாடி வதங்கிக் கொண்டிருக்கும்
உம் குடும்பத்தினரும், உற்றார், உறவினரும்.

'பரிமளபதி'', கோண்டாவில். 5-9-1985
(550)

# சோவியத் தலைவர் கோபச்சேவ்

# யு.எஸ். செனட்டர்கள் சந்திப்பு!

மாஸ்கோ, செப்-4

"அமெரிக்க அதிபர் திரு. றெனல்ட் றீகன் விண்வெளியில் ஆயுத பாவனைகளைக் குறைத்தால் சோவியத் யூனியன் அணுசக்தி ஏவுகணை உற்பத்திகளில் கட்டுப்பாட்டை மேற்கொள்ளும்" என்று சோவியத் தலைவர் திரு. கோபச்சேவ் தெரிவித்துள்ளார். தம்மைச் சந்தித்த ஏழு முக்கிய அமெரிக்க செனட்டர்களிடமே அவர் இதனைத் தெரிவித்தார்.

றுபேர்ட் பேர்ட் என்ற செனட்டர் தலைமையில் ஏழு அமெரிக்க செனட்டர்கள் நேற்று முன்தினம் திரு. கோபச்சேவைச் சந்தித்தனர். அப்போதே திரு. கோபச்சேவ் அவர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நவம்பரில் திரு றீகனுடன் ஜெனீவாவில் திரு கோபச்சேவ் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னோடியாகவே அமெரிக்க செனட்டர்கள் கோபச்சேவை நேற்று முன்தினம் சந்தித்தனர். இச்சந்திப்பில் தாம் திருப்தியடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

திரு கோபச்சேவ் அமெரிக்க சஞ்சிகையான 'டைம்ஸ்'க்கும் நீண்ட பேட்டியொன்றை வழங்கியுள்ளார். அப்பேட்டியில் தாம் பல முக்கிய விடயங்களை றீகனைச் சந்திக்கும்போது முன்வைக்கப்போவதாக அவர் தெரிவித்தார்.

திரு. றீகன் இப்பேட்டி குறித்துக் கருத்து வெளியிடுகையில், தாம் அவ்விடயங்களை ஆவலுடன் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் அவர் கோபச்சேவைச் சந்திப்பதில் விருப்பம் கொண்டுள்ளது தெளிவாகியிருப்பதும் தெரியவந்துள்ளது. (கி)

## கிரேக்கத்தில் குண்டுவீச்சு:

## 18 பிரிட்டிஷ் உல்லாச பயணிகள் காயம்!

ஏதென்ஸ், செப்-4

கிரேக்கத்திலுள்ள உல்லாசப் பயணப் பிரதேசமொன்றில் இரு கைக்குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன. இதில் பதினெட்டு பிரிட்டிஷ் உல்லாசப் பயணிகள் காயமடைந்தனர்.

கடற்கரைப் பகுதியொன்றில் வெய்யில் காய்ந்துகொண்டிருந்தபோதே அப்பயணிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. நீச்சல் தடாகத்தைச் சுற்றிவர இருந்த சில பயணிகளும் காயப்பட்டனர்.

இக்குண்டு வீச்சுக்குத் தாமே பொறுப்பென்று பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த 'கறுப்பு செப்டம்பர்' என்ற பிரிவு உரிமை கோரியுள்ளது.

கிரேக்கத்தில் ஜோர்தானிய ராஜதந்திரி ஒருவர் அண்மையில் கொலைசெய்யப்பட்டார். இது தொடர்பாகப் பாலஸ்தீனக் கெரில்லா உறுப்பினர் ஒருவர் கிரேக்கத்தில் கைதானார் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது (கி)

## மதவாச்சி சம்பவம்

(கொழும்பு)

மதவாச்சியில் தம்பன்கடுவ என்ற இடத்தில் கடந்த 2-ம் திகதி தீவிரவாதிகளால் இரு வீடுகள் எரிக்கப்பட்டதாகவும் தாக்குதல்கள் இடம் பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

மதவாச்சியிலிருந்து 18மைல் தொலைவில் உள்ள இந்தஇடம் செட்டிக்குளத்தை அண்மித்த பகுதியாகும்.

மேற்படிசம்பவத்தையடுத்து அப்பகுதிக்கு ராணுவம் வந்ததாகவும் தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## "மன்னாரில் 46 தமிழர் சுட்டுக் கொல்லப்பட்டனர்"

### இரமேஸ்வரம் சென்ற பெண் அகதி தகவல்

(இராமேஸ்வரம்)

"மன்னார்ப்பகுதியில் 46 தமிழர்கள் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்", இவ்வாறு அகதியாக இராமேஸ்வரம் சென்ற பெண் அகதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மகேஸ்வரி என்ற இந்தப்

(7-ம் பக்கம் பார்க்க)

## உலகச் செய்திகள்

# இடிஅமின் விசுவாசிகள்

# உகண்டாவுக்குள் வருகை

கம்பாலா, செப்-4

உகண்டாவினுள் முன்னாள் ஜனாதிபதி இடிஅமினுக்கு விசுவாசமான இராணுவத்தினர் வருவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது இதனையடுத்து கடந்த சில தினங்களாக அவர்கள் மீண்டும் உகண்டாவினுள் பிரவேசித்துள்ளனர்.

புதிய உகண்டா ஆட்சியாளர்களே இந்த அனுமதியை வழங்கினர் இந்த அனுமதி குறித்து தன்ஸானியா அரசாங்கம் உகண்டாவிடம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது

1979ம் ஆண்டு இடிஅமினின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவருக்கு விசுவாசமான இராணுவ அதிகாரிகள் உகண்டாவைவிட்டுத் தப்பியோடி சூடான், ஸயர் ஆகிய நாடுகளுக்குள் தஞ்சம் புகுந்தனர்

தொடர்ந்து டாக்டர் ஒபேட்டோவின் ஆட்சியை ஜெனரல் டிட்டோ ஒகேலோ கவிழ்த்ததையடுத்து இடிஅமினின் இராணுவத்தினர் உகண்டா வரத் தொடங்கியுள்ளனர்

இவர்கள் வருகை தற்போதைய உகண்டா இராணுவத்திலுள்ள சிலருக்கு அதிருப்தியையும் அளித்துள்ளது. ஏனெனில் இடிஅமின் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிகளில் இந்த அதிகாரிகள் நேரடியாக ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## பம்பாயில் பி.ரி. விமானம் திடீர் தரை இறக்கம்!

பம்பாய், செப். 4

பம்பாய் விமான நிலையத்தில் பிரிட்டிஷ் விமானசேவை போயிங் '747' விமானம் ஒன்று நேற்றுத் திடீரெனத் தரை இறங்கியது.

இவ்விமானத்தில் சுமார் 350 பயணிகள் இருந்தனர். அவ் விமான இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறே இத்திடீர் தரை இறக்கத்துக்குக்காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டனிலிருந்து ஹொங்கொங்கிற்கு இந்த விமானம் சென்றுகொண்டிருந்தது. இடையில் எங்கும் தரிக்காமல் ஒரேயடியாக இப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இந்தியாவுக்கருகே அவ்விமான இயந்திரம் கோளாறுக்குட்பட்டதையடுத்து உடனடியாக அது தரை இறங்க வேண்டியதாயிற்று.

அத்திலாந்திக் சமுத்திரத்திலும், ஜப்பானிலும் அண்மையில் இருபெரும் போயிங் விமான விபத்துக்கள் நிகழ்ந்தன. இதனையடுத்து இந்நிரக விமானங்களின் பயணம் மிக எச்சரிக்கையுடனேயே நடைபெறுகிறதென்பது குறிப்பிடத்தக்கது. (கி)

## தருமர் - ஆலால் கொலைகள்

## 'ஸ்கொட்ஸ்மன்' கருத்து

(லண்டன்)

யாழ்ப்பாணத்தில் த. வி. கூ. முன்னாள் பாராளுமன்றஉறுப்பினர்கள் திரு ஆலாலசுந்தரம், திரு. தருமலிங்கம் ஆகியோரின் கொலைகள் குறித்து பிரிட்டனின் 'ஸ்கொட்ஸ்மன்' பத்திரிகை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளது.

'இந்த இரு கொலைகள் போன்ற வன்முறைகளினால் காலத்துக்குக் காலம் இலங்கை இனப்பிரச்னைக்கான தீர்வு முயற்சிகள் பாதிப்படைந்துள்ளன.'

கடந்த இருவருட காலங்களில் இத்தகைய வன்முறைகளினால் சுமார் 2000 பேர் கொல்லப்பட்டுள்ளனர்

தீவிரவாதிகள் சமரசத் தீர்வுக்கு உடன்படுவதாக இல்லை. எனவே வன்முறைகள் மூலம் அதற்கான சாத்தியங்களைக் குழப்புவது அவர்களின் நோக்கமாகவுள்ளது

தமிழர் விடுதலைக் கூட்டணி நியாயபூர்வமான அர்த்தமுள்ள தீர்வுகளை முன்வைத்தால் மட்டுமே அவற்றை ஏற்பதற்கு தயாராகவுள்ளது.

எனவே அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமாகக் கூடுதல் அதிகாரங்களை வழங்குவதன் மூலமே ஜனாதிபதி ஜயவர்த்தன சமரசப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க முடியும்.

★ ★ ★

## 'ஆலால்' பற்றி கிறிஸ்மோர்

(லண்டன்)

த. வி. கூ. முன்னாள் எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம் தாம் கொலை செய்யப்படுவதற்குப் பத்துத் தினங்களுக்கு முன்னர் பி. பி. ஸி. நிருபர் கிறிஸ்மோருக்குப் பேட்டியளித்துள்ளார். அப்பேட்டியில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை அவர் பாராட்டியதாக கிறிஸ்மோர் தெரிவித்துள்ளார்

அவர் கூறியதாவது:- "திரு. ஆலாலசுந்தரம்கொலை செய்யப்படுவதற்குப் பத்துத் தினங்களுக்கு முன்னர் எனக்குப் பேட்டியளித்தார்.

"தமிழ்த் தீவிரவாதிகளுக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையே பிளவு ஏற்பட்டுள்ளதா? எனக் கேட்டபோது அவர் அதனை முற்றாக மறுத்தார்.

இரு சாரரினதும் உறவு மிக நல்லநிலையில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார். கூடவே தமிழ்த்தீவிரவாதக் குழுக்களையும் அவர் பாராட்டினார்.

தீவிரவாதிகள் கொடுத்த நெருக்கடியினாலேயே அரசாங்கம் பேச்சுக்களுக்கு இணங்கியது அந்த நெருக்கடி காரணமாகவே சமரசப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தவும் இலங்கை அரசு ஆர்வமாகவுள்ளது" என்றார்.

திரு ஆலாலசுந்தரம், தருமலிங்கம் ஆகியோரின் கொலைகள் தமிழ்மக்களிடையே பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது 90 வீதமானவர்கள் இது குறித்து கவலை கொண்டுள்ளனர்." என்று கிறிஸ்மோர் குறிப்பிட்டார். (கி)

## ஆலால், தருமர் கொலை கருணாநிதி கண்டனம்!

(சென்னை)

தி மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி, யாழ்ப்பாணத்தில் இரு தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னாள் எம். பி.க்களான திரு மு. ஆலாலசுந்தரம் திரு. வி தர்மலிங்கம் ஆகியோர கொலைசெய்யப்பட்டதைக் கண்டித்துள்ளார்.

திரு. கருணாநிதி இது குறித்துப் பெரும் அதிர்ச்சியும், கவலையும் வெளியிட்டுள்ளார். இந்த இரு கொலைகளும் அர்த்தமற்றவை எனவும், மோசமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். (கி)

## நாவற்குழியில் சோதனை

(கல்வியங்காடு)

நாவற்குழியில் நீண்ட நாட்களின் பின் நேற்றுமுன்தினம் வாகனங்கள் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டன.

**மணிவாக்கு**

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையிலும் மாணப்பெரிது.

— குறள்

# நமது நோக்கு

## அரசியல் கொலையை அடுத்துவந்த உயிர்க்கொலை

மானமுள்ள தமிழன் எவனும் இந்த மர்மக் கொலைகளுக்கு பொறுப்பாயிருப்பானா என்ற பேரதிர்ச்சி மக்களை நடுங்கவைத்திருக்கிறது.

இக்கொடிய செய்தியைக் கேள்விப்பட்ட இந்திய அரசே அதிர்ச்சியும் கவலையும் அடைந்திருப்பதானால் இங்குள்ள நிலைமையை கற்பனை செய்வது கடினமல்ல.

இங்கு என்னும்போது நாம் இந்த நாட்டைக் குறிப்பிடவில்லை; இன்று நாட்டின் ஆட்சிக்கப்பால் எவ்விதபாதுகாப்பு ஒழுங்கு, கட்டுப்பாடு இன்றி அராஜகத்தின் அடிமட்டத்தில் வாழும் யாழ்ப்பாணத்தையும் ஏனைய தமிழ் மாவட்டங்களையுமே நாம் குறிப்பிடுகின்றோம்.

அரசியல் கொலையிலும் பலவிதம்; அவற்றுள் பாராளுமன்ற அங்கத்தவர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பதவி காலத்திலும் பதவி இழந்த நிலையிலும் கொல்லப்பட்டிருக்கின்றனர் கொலை எத்தனத்தில் சிலர் தப்பியும் இருக்கின்றனர்.

அவை அனைத்தும் அரசியல் கொலைகள். ஆனாலும், அவற்றுள் மக்கள் கவலையும் அதிர்ச்சியும் அடைந்தபோதும், மர்மம் எதுவும் காணப்படவில்லை. தமிழன் தமிழனைக் கொன்றது தெரிவாகாதபோதும், 'மானத் தமிழன்' செய்தசெயல் என்ற விளக்கம் மரணச் செய்தியோடு ஒட்டி இருந்தது.

ஆனால் இன்றைய கோரக் கொலைகள் ஒரு பெரும் திட்டத்தின் அம்சமாகக் காணப்படுவதால் அதிர்ச்சி என்னும் உணர்வை படிப்படியாக இழந்து வரும் பொதுமக்கள் இன்று நடைபெறும் போரில் இது எந்த அத்தியாயமென்று தெரியாது தத்தளிக்கின்றனர்.

இதுதான் ஈழம் என்னும் வேழம் வருமுன் கேட்கும் மணி என்ற ஏளனம் இலங்கை வானொலிச்செய்தியில் சொல்லாமற் சொல்லப்பட்டது

எங்கு எந்தக்கொலை நடந்தாலும் குறிப்பிட்ட இயக்கமே காரணமென்பதை இன்று தென்னிலங்கை நம்பத் தயார். எனவே இந்தப் பாரதூரமான சம்பவத்துக்கு அதே இயக்கம்தான் காரணமென்றால் இந்தநாட்டில் மட்டுமல்ல, உலகெங்கிலும் தமிழர் விடுதலை இயக்கத்துக்கு மட்டுமல்ல தமிழினத்துக்குமே பெரும் அபகீர்த்தி என்பதை உணராது பரப்பப்படும் செய்தி அல்ல இது

பல வகைகளில் நலிவுறும் தமிழ்மக்கள் இவ்வித செய்தியாலும், செயலாலும் மனச்சோர்வுகொண்டு அரசின் தயவில் சரண் அடைவார்களென்ற தப்பபிப்பிராயத்துக்கும் இத்தகைய பிரசாரம் இடமளிக்கின்றது!

யார் இதற்கு பொறுப்பென்றாலும் இத்தகைய கொடுமைகளுக்கு இன்று இங்கு நிலவும் அராஜகமே முதற்காரணம்.

ஆறுவது சட்டத்திருத்தத்தால் தமிழ்மக்கள் பிரதிநிதிகள் அரசியல்கொலைக்கு ஆளானார்கள்.

தமிழ்மக்கள்பேரில் நடைபெற்ற எதிர்ப்பு இயக்கங்களின் தீவிரச்செயல்களுக்குத் தாக்குப்பிடிக்கமுடியாத கட்டத்தில் தனது அவசர ஆறும் திருத்தத்தை பிரயோகித்த அரசு இதனை நினைந்து நினைந்து நிச்சயம் கவலையுற்றிருக்கும்.

யார் தலைவர்கள்; யாருடன் பேசி இதற்கு முற்றுப் புள்ளி வைக்கலாமென்ற பிரச்சினை இலங்கை அரசுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே ஏற்றில் எழுந்தது

இந்த 'அரசியற் கொலை'யின் அனர்த்தங்களைக் காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் முன்கூட்டியே உணர்ந்து இதற்கு முடிவுகட்ட வேண்டுமென்று எச்சரித்திருந்தார்.

இன்று பேச்சுவார்த்தைகளுக்கு உடன்பட்ட கட்சியின் முன்னைநாள் எம். பி.க்கள் மாயமான முறையில் கொலைசெய்யப்பட்டது எதனைக் குறிக்கிறதென்பது வெளிவராத மர்மங்களில் ஒன்றாக இருக்கமுடியாது.

யார் செய்தாலும், எக்காரணத்திற்கென்றாலும் அது ஒருபோதும் நிறைவேறுவதில்லை என்பது வரலாற்றின் பொதுவான பாடம்.

ஆனால் இந்தக் கட்டத்தில் இத்தகைய நிகழ்ச்சி, நாம் எதிர்பாராத வேறு ஆபத்துகளுக்கு இடமளிக்கலாம்.

பாரதத்தின் மத்தியஸ்தத்துக்கு இலங்கை அரசு காட்டும் இன்றைய அனுதாபம், பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட அதன் உதவியைப் பெறுவதற்கே.

எனவே மக்கள் தளர்ச்சியடையாது நெருக்கடியிலும் நிதானமாகவும் கட்டுப்பாட்டுடனும் நடந்துகொள்ளவும் அரசியல் சூழ்ச்சியில் அகப்படாது விழிப்புடன் இருக்கவும் பழகிக்கொள்ள வேண்டும்.

மக்களுக்கு மாறான இத்தகைய செயல்கள் அவற்றைப் புரிந்தவர்களுக்கு வெற்றியளிக்குமானால் எமது உரிமைகளுக்கு மட்டுமல்ல உயிருக்கும் முடிவுகட்டும் என்பதை நாம் வற்புறுத்த வேண்டும்.

# ஸ்ரீ கிருஷ்ணன் அவதாரம் எடுத்ததன் நோக்கம்

**வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் நாளையதினம் ஸ்ரீகிருஷ்ணஜயந்தி விழா நடைபெறும்.**

ஸ்ரீ கிருஷ்ணர் உலகத்தை உய்விக்கும் வண்ணம் ஆவணி மாதத்தில் கிருஷ்ணபட்ச அட்டமியும் திதியும் ரோகணி நட்சத்திரமும் கூடிய நன்னாளில் அவதரித்தார், இத்தினத்தை சைவ வைணவ மக்கள் விமரிசையாகவும் பக்தியுடனும் கொண்டாடுவர். ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி தினத்தைக் கொண்டாடுவதால் துன்பங்கள் நீங்கும். ஜயந்தி தினத்தைப்பக்தியுடன் அனுட்டித்து சுமங்கலிகள் சௌபாக்கியம் பேறு நான் மக்கட்பேறு என்பனவற்றை அடைவர்.

உலகில் ஆன்ம கோடிகளுக்கு இருள் நீக்கி இன்பஒளி உண்டாகவே கிருஷ்ணாவதாரம் ஏற்பட்டது. அசுபத்தைநீக்கி சுபத்தை அருள்வதால் ஜயந்தி எனவும் இந்த ஜயந்தி இலட்சுமி கடாட்சத்தை விசேடமாக அருள்வதால் ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி எனவும் போற்றப் படுகிறது

கிருஷ்ணன் நள்ளிரவில் அவதாரம் பண்ணியதால்கிருஷ்ண ஜயந்தியை நள்ளிரவிலேயே கொண்டாடுவர். கிருஷ்ண

வார் பாடிய பாசுரங்களை இசைக்கலாம்;

கிருஷ்ண ஜயந்தியை ஆலயங்கள் ரோகிணியைப் பிரதானமாகக் கொண்டும், வீடுகளில் அட்டமியைப் பிரதானமாகக் கொண்டும் அனுட்டிக்கவேண்டும். ஜன்மாஷ்டமி என்ற கிருஷ்ண ஜயந்தியைக் குறிப்பிடுவதிலிருந்து வீடுகளில் அட்டமித் திதியில்

**பிரம்மஸ்ரீ சாமி. விஸ்வநாதக்குருக்கள்**

ஜயந்தியன்று சாயங்காலத்தில் நீராடிப் புனிதராயிருந்து இத்தினத்தை அனுட்டிக்க வேண்டும், கிருஷ்ண விக்கிரகத்தை நீராட்டி அலங்கரித்து ஆராதனைகள் செய்து தொட்டிலிட்டுச் சீராட்ட வேண்டும். கிருஷ்ணனை தொட்டிலிட்டு சீராட்டும் போது பெரியாழ் கொண்டாடுவது நன்று என உணரவேண்டும் நட்சத்திரத்தை முன்னிட்டே நாம்

எல்லோரும் பிறந்த தினத்தைக் கொண்டாடவேண்டும். 'பேத்டே' என்று சொல்லி ஆங்கில மாத திகதியில்பிறந்த நாளைக்கொண்டாடுவது நமது கலாசாரம், சமய நம்பிக்கை என்பனவற்றுக்கு விரோதமாகும்.

கிருஷ்ண ஜயந்தி தினத்தை விஷ்ணு ஆலயங்களில் விமரிசையாகக் கொண்டாடுவது அவசியமாகும். பாலலீலைகள் பல நிகழ்த்தி அக்காலத்தில் வாழ்ந்தவர்களை உய்யக்கொண்டது மட்டுமன்றி தன் லீலா நிகழ்ச்சிகளால் இக்காலத்தவரையும் ஈடுபடச் செய்பவரும், பகவத்கீதை மூலம் எல்லோருக்கும் உபதேசம் செய்பவருமான கிருஷ்ணமூர்த்தி அவதரித்த கிருஷ்ண ஜயந்தி விழா வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் இம்மாதம் 6-ம் திகதி வெள்ளிக்கிழமை இரவு நிகழும். கிருஷ்ண ஜயந்தி விழாவை அனுட்டித்து எல்லோரும் இலக்குமி மணாளன் அருளுக்குப் பாத்திரமாவார்களாக.

## இன்று நடைபெறும் நல்லூர் ஆதீன 19-வது பீடாரோஹண விழா

நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனம் தமிழ்மக்களுக்குக் கிடைத்துள்ள அருட்சொத்துக்களுட் தலையாயது 'குரு' நிலைப்பட்ட சமயவாழ்வினைத் தெருட்டிநிற்பது ஆன்மீகத்துக்கும், அதிலீடுபாடு கொண்டுள்ள அடியார்களுக்கும் இணைப்புப்பாலமாகத் திகழ்வது சம்பந்தக் குழந்தையின் ஞானத்தைச் சம்பத்தாகக் கொண்டு தொண்டாற்றுவது.

சொத்துக்களுட் சிறப்புடையது அருட்சொத்து அது நிறைந்த பரோபகாரமுறைமையில் இன்பம் பயக்கும் புனித இடம் நல்லையாதீனம் அதனை நெறிப்படுத்தி அருளுபதேசத் திலைவாரி வழங்குபவர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் பரார்த்த பூசைகளினால் பக்திநெறி பெருக்கும் 'திருவருட்சுரங்கம்' என ஆதீனத்தைப் போற்றுதல் செய்யவேண்டுவது நம்மனைவரதும் கடமையாகும்.

பீடாரோஹணம் - பீடத்தில் இருத்தி அருள்நிலைப்படுத்தும் சடங்கு தெய்வத்தின் சமான நிலைக்குக் குருவினை உயர்த்தி அதிலின்றும் ஞானவிளக்கமும் அருள்விளக்கமும் எய்தும் முறைமையினை வைதிக சைவ மரபுகளாற் பேணிச் செய்யப்படும் கிரியா நெறி இவை சைவப்பெருமக்களது கண்ணுக்கும், கருத்துக்கும் காயத்துக்கும் உறுதியும், உய்தியும் பயப்பன.

ஆதீன முதற்குரு ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் முத்தமிழும் வல்ல சுவாமிகளுக்கு பீடாரோஹணவிழா நிகழ்த்தியவர் நல்லை பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள் இன்றுள்ள இரண்டாவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிகஞானசம்பந்தபரமாசார்ய சுவாமிகள் முத்தமிழும் காத்து அறப்பணிகள் பல புரிந்து வருகின்றார்கள். அனைவரையும் அரவணைக்கும் இந்து தத்துவ நெறி நின்று அன்பும் பண்பும் கொண்ட அருளுள்ளம் வாய்க்கப் பெற்றவர்கள் சுவாமிகள்.

'ஆதீனம்' என ஈழத்திருநாட்டில் அழைக்கப்படும் ஒரேயொரு சமய நிறுவனமான நல்லையாதீனத்தில் பல் துறைப்பணிகள் இயற்றப்படுகின்றன. சமயதீட்சை, சைவக்கிரியைகள், திருமறை, திருமுறைப் போதனைகள் விழாக்கள், சொற்பொழிவுகள், பண்ணிசையரங்குகள், உபநயனம், மகாநாடுகள், இந்துசமயவகுப்புகள், அன்னதானம், அறிவுத்தானம், குருபூசைகள், வாழ்வு மறுமலர்ச்சிப்பணிகள் என விரிவுபெறும் இவற்றிலே தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் பூர்வபுண்ணியப்பேறு பெற்றவர்கள்.

இன்று நிகழும் 'பீடாரோஹணவிழா' சைவநெறி உலகெலாம் விளங்கச் சிறப்புறுவதாக! கலைஞானம் செழித்தோங்க அன்பர்கள் ஒத்துழைப்பு நல்குவார்களாக; ஞானகுரு வாணிபதம் நாடு!

— கனகசபாபதி நாகேஸ்வரன்

## நகை அடைவு வைத்தோரின் போராட்டம் தொடர்கிறது

(மாவிட்டபுரம்)

நகை அடைவு வைத்தவர்களின் மறியற் போராட்டம் காங்கேசன்துறை மக்கள் வங்கி முன்பாகத் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

கடந்த திங்கள் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட இம்மறியற் போராட்டம் தொடர்ந்து தினமும் நடைபெற்றுவருகின்றது. தினமும் நூற்றுக்குமேற்பட்ட ஆண்களும் பெண்களுமாக இம்மறியற் போராட்டத்தில் கலந்துகொள்கிறார்கள்.

சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் நடைபெறும் இப்போராட்டத்தால் வங்கி வேலைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளன, தினமும் வங்கி ஊழியர்களும், வாடிக்கையாளர்களும் வந்து திரும்பிச் செல்கின்றனர்.

## இன்று யோகர் சுவாமிகள் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சிவயோக சுவாமிகளின் வரலாறும் சாதனைகளும்' நூல் வெளியீட்டுவிழா இன்று காலை 8-30க்கு யாழ் மத்தியகல்லூரி மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர்பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் நடைபெறும்.

சிவயோகசுவாமிகளின் பூசையுடன் ஆரம்பமாகும்இவ்விழாவில் தலைமையுரையினைத் தொடர்ந்து ஆரம்பஉரையினை திரு. மு. அருணாசலம் நிகழ்த்துவார்.

யாழ்: பல்கலைக்கழகவரலாற்றுத்துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம், வித்துவான் க. சொக்கலிங்கம், மில்க்வைற் செய்தி ஆசிரியர் க. சி. குலரத்தினம் ஆகியோர் ஆய்வுரைகள் நிகழ்த்துவார்கள்.

## வண்ணநகர் நல்லையிலே வாழ்கின்ற முருகனை

விண்ணவர்கள் தொழுதேத்தி
விரைமலர்கள் சொரிகின்றார்
மண்ணவர்கள் அழுதேத்தி
மஞ்சனநீர் ஆட்டுகின்றார்
பண்ணவர்கள் பாட்டிசைத்து
பாதமலர் கழுவுகின்றார்
எண்ணவர்கள் இசையெழுப்பி
ஏழிசையால் புகழ்கின்றார்
கண்ணவர்கள் காதலித்தே
கந்தனையே காண்கின்றான்
பெண்ணவர்கள் பெருமிதமாய்
பெருமையுடன் வழுத்துகின்றார்
வண்ணவர்கள் வலம்வந்து
வரங்கேட்டு வணங்குகின்றார்.
வண்ணநகர் நல்லையிலே
வாழ்கின்ற முருகனையே!

— முருக. வே. பரமநாதன்

ஈழநாடு-தேசிய தினசரி The Eelanadu National Tamil Daily

# "தமிழர் வரலாற்றில் மறக்கமுடியாதவர்கள்"

## ஆலால், தர்மர் மறைவுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

"தமிழ் மக்களின் தலைவர்களான திரு. வி. தர்மலிங்கம், திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் ஆகியோரின் அகால மறைவு தமிழ் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். திரு. வி. தர்மலிங்கம் தமிழ் மக்களின் விடுதலைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் உழைத்த உத்தமர். பல ஆண்டு காலம் பாராளுமன்ற அங்கத்தவராக இருந்து அளப்பரிய பங்களிப்பை செய்தவர். குறிப்பாக 1972ம் ஆண்டு தொடக்கம் 1977ம் ஆண்டு வரை சிறையில் சித்திரவதைப் படுத்தப்பட்ட இளைஞர்களுக்காக குரல் கொடுத்து, சர்வதேச மன்னிப்புச்சபைக்கு இம் மனித உரிமை மீறலை கொண்டுவந்து உலகின் கவனத்தை ஈர்க்கச்செய்தவர்.

அந்தக்காலகட்டத்தில் சிறையில் இருந்த இளைஞர்களின் இல்லங்களுக்கு காலத்துக்குக் காலம்சென்று அவர்களின் பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் ஆறுதல்கூறி உதவி புரிந்தவர். தமிழ் மக்களின் விடுதலை வரலாற்றில் அவருடைய பங்களிப்பு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் மறக்கமுடியாது" என்று தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க யாழ்ப்பாண தேசிய கூட்டுறவு சபைத்தலைவர் திரு. சி. சிவமாராசா விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் சிறுவயதில் இருந்து அரசியலிலும், சமூக சேவையிலும் தன்னை அர்ப்பணித்த உத்தமர். குறுகியகால பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் தமிழ் மக்களின் விடுதலை வரலாற்றில் அவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். ஆரம்பகாலம் தொடக்கம் தமிழரசுக்கட்சி, தமிழரசு வாலிப முன்னணி ஆகியவற்றை கட்டி வளர்ப்பதில் முக்கியமானவராக திகழ்ந்தார். இந்த இயக்கங்களின் அமைப்பு வேலைகள் எல்லாவற்றிலும் முன்னின்று பொறுப்பேற்று செய்து வந்தவர். சத்தியாக்கிரக போராட்ட காலத்தில் இளைஞராக இருந்து அளப்பரிய சேவையாற்றியவர்" என்றும் திரு. சி. சிவமாராசா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழீழ மாணவர் பேரவை நடத்திய பெரும் ஊர்வலம்

[எம்: ரி. சந்திரகுமார்]

வெலிக்கடைச் சிறையில் 27வது நாளாக சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டு மரணப்பிடியில் உயிருக்காக ஊசலாடிக்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து தமிழீழ மாணவர் பேரவை (ரெசோ) நேற்று மாபெரும் மௌன ஊர்வலமொன்றை நடத்தியது.

கேதீஸ்வரன், இருபாகரன் ஆகிய இளைஞர்கள் முன்னர் எரித்துக்கொல்லப்பட்ட இடத்திலிருந்து [ஆரியகுளத்தடி] காலை 10-50 மணிக்கு இவ் ஊர்வலம் ஆரம்பமானது.

"மானுட விடுதலை மாணவர் ஒருபடை" என்ற சிகப்புத்துணியில் எழுதப்பட்ட சுலோகத்தை தாங்கியவண்ணம் ஆரம்பித்த ஊர்வலத்தில் 3000க்குமதிகமானோர் கலந்துகொண்டனர். இவ்வூர்வலத்தின் முன்னால் தமிழ் மக்களின் உணர்ச்சிகளை வெளிக்காட்டும்வாசகங்களை காரொன்றில் 4 இளைஞர்கள் ஒலிபெருக்கியில் ஒலிபரப்பியவண்ணம் சென்றுகொண்டிருந்தனர்.

### கறுப்புத்துணியால் பட்டி

ஊர்வலத்தில் கலந்துகொண்ட அனைத்து மாணவ மாணவிகளும், இளைஞர்களும் தங்களது வாயை கறுப்புத்துணியினால் கட்டியவண்ணம் கறுப்புப்பட்டி அணிந்துசென்றுகொண்டிருந்தனர்.

மானுடம் வெல்க விலங்குகள் நொருங்குக, வரலாறு விடுக்கும் அறைகூவல் ஏற்போம், மாணவர் புதிய உலகினை அமைப்போம், தளைகளை தகர்ப்போம், மக்கள் சக்தி மாபெரும் சக்தி என்ற வாசகங்கள் சுலோக அட்டைகளில் எழுதப்பட்டிருந்தன.

ஊர்வலம் ஆஸ்பத்திரிவீதி, கஸ்தூரியார் வீதி, பிறவுண் வீதி, இராமநாதன் வீதி என்பவற்றினூடாகச்சென்று யாழ் பல்கலைக்கழகத்தை வந்தடைந்தது.

### கருத்தரங்கு

தமிழீழ மாணவர் பேரவையினர் யாழ் பல்கலைக்கழகத்தில் கருத்தரங்கொன்றையும் நடாத்தினர்: பல்கலைக்கழக கலாச்சார குழுவினர் ஆதரவில் இன்றைய தமிழ்மக்களின் நிலையை படம் பிடித்துக்காட்டும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அதையடுத்து மௌன ஊர்வலத்தில் கலந்துகொண்டோர் அனைவரும் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் உண்ணாவிரதத்தில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

### மணியம் தோட்டத்திலிருந்து

ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றும் நேற்றையதினம் யாழ் பல்கலைக்கழகத்தை சென்றடைந்தது. கொழும்புத்துறை மேற்கு மணியந்தோட்டத்திலிருந்து அவ்வூர் பொதுமக்களால நடாத்தப்பட்ட ஊர்வலத்தில் இருநூற்றுக்குமதிகமானோர் கலந்துகொண்டனர்.

"கொலைஞர்கள் வெஞ்சிறையில் இளைஞர்கள் பட்டினிப் போராட்டம்" என்ற சுலோகத்தை தாங்கியவண்ணம் இரு பெண்கள் முன்செல்ல "போராளிகளே போராடுங்கள், மக்கள் சக்தி மாபெரும் சக்தி, தமிழர்கள் படுகொலை சிங்களவர் கொண்டாட்டம், விடுதலை செய் அல்லது விசாரணை செய்" என்றவாறு கோஷங்களை எழுப்பிய வண்ணம் இவ்வூர்வலம் யாழ். பல்கலைக்கழகத்தை சென்றடைந்தது. கருத்தரங்கு வைபவம் ஒன்றும் இடம்பெற்றது. (ச)

# வான்மோதி சிறுவனுக்கு தலையில் காயம்

(யாழ்ப்பாணம்)

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சிறுவனொருவனை எதிராகவந்த வான் மோதியதால் சிறுவன் தலையில்பலத்த காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் கொக்குவில் பகுதியில் நடைபெற்றுள்ளது. கடைக்கு சென்றுகொண்டிருக்கையில் பிரதான வீதியை கடக்க முற்பட்டபோதே தன்னை வானொன்று மோதியதாகவும் அறிவிழந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் அச்சிறுவன்கூறியுள்ளான்.

இவ்விபத்துக்குள்ளாகிய சிறுவன் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த பி. பவானந்தம் என்பவராவார். (ச)

## முழு அளவில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் செல்லவில்லை. அரசாங்க செயலகங்கள் இயங்கவில்லை. தனியார் கல்லூரிகள், மினி சினிமாக்கள், சந்தைகள் எதுவும் கூடவில்லை. எங்கும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

யாழ். நகரில் லொறிகள், கார்கள், டாக்ஸிகள், ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள் உட்பட எந்த வாகனமும் வீதிக்கு வரவில்லை.

நீதிமன்றத்திற்கு சட்டத்தரணிகள், சாட்சிக்காரர்கள் வராததினால் விசாரணை நடைபெறவில்லை; ஊழியர்களும் குறைவாக வந்திருந்தனர்

யாழ் நகர், சுன்னாகம், கொடிகாமம், திருநெல்வேலி, கல்வியங்காடு சந்தைகள் நேற்றுக்கூடவில்லை சிறுவியாபாரிகள் கூட இச் சந்தையில் காணப்படவில்லை (க)

## நேற்று நடை....

1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாணவ மாணவிகளை. இந்த பஸ்களே அங்கு ஏற்றிவந்தன

மாணவர்களே இந்த பஸ்ஸில் சாரதிகளாக பணியாற்றினார்கள்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் இளைஞர்களுக்கு ஆதரவாக இந்த ஊர்வலம் நடைபெற்றது. 12 இ. போ. ச. பஸ்கள் நேற்றுக்காலை எடுத்துச் செல்லப்பட்டதாகவும், நண்பகல் இரு பஸ்கள் திருப்பி ஒப்படைக்கப்பட்டதாகவும், பஸ் டிப்போ வட்டாரங்கள் தெரிவித்தன: (க)

## தருமர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பர்கள் தொடர்ந்து பக்திப் பாடல்கள் பாடிக்கொண்டிருந்தனர்,

வீட்டுவாசலில் கூட்டணியின் 'உதயசூரியன்' கொடி காணப்பட்டது.

திவ்ய ஜீவன சங்கத் தலைவர் திரு. எஸ் கனகரத்தினம், யாழ். மாவட்டசபை முன்னாள் உறுப்பினர்கள், யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினர்கள். பனம் பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு கே நடராசா, மற்றும் சட்டத்தரணிகள், கூட்டணிப் பிரமுகர்கள் ஆகியோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

கல்வியங்காடு, கோப்பாய், அச்சுவேலி, நல்லூர் பகுதிகளில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

கூட்டணி ஆதரவாளர்கள், அச்சுவேலிவரை நேற்று ஊர்வலமாகச்சென்று அச்சுவேலியிலுள்ள பொதுஇடத்தில், திரு ஆலாலசுந்தரத்தின் பூதவுடலை மக்கள் அஞ்சலிக்காக வைக்க விரும்பியபோதிலும், நேற்று ஹர்த்தால் நடைபெற்றதினால், அது சாத்தியமாகவில்லை

வெளிநாட்டிலுள்ள மானிப்பாய் எம். பி யின் மகன் சித்தார்த்தன் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும், அவர் சுகவீனமுற்றிருப்பதால். உடன்வரமுடியவில்லை என்று கூறப்படுகிறது. (க)

# 'கிசு கிசு' டெக் அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள இருமினி தியேட்டர்களில் நேற்று ஆபாசப் படங்கள் காட்டியதைத் தொடர்ந்து சோதனை நடத்திய இளைஞர் கோஷ்டி படச்சுருள்களையும் டெக்குகளையும் பறிமுதல் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் யாழ். நகரிலுள்ள சில மினி தியேட்டர்களிலிருந்து டெக் மற்றும் க. வி படச்சுருள்களை பறிமுதல்செய்தது குறிப்பிடத்தக்கது: (மா]

## சமரசப் பேச்சு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வில்லை என்றும், தீவிரவாத அமைப்புகளில்ஏதாவது ஒன்று இதற்குப்பொறுப்பாக இருக்குமேயானால் அதனால் அமைப்புகளிடையே ஒற்றுமையின்மையையே தோற்றுவிக்க வாய்ப்பளிக்கும் என்றும், அவ்வாறு இல்லாதபட்சத்தில் அதிக பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை இனப்பிரச்னையை தீர்த்துவைப்பதில் ஒவ்வொருவரும் கடந்த இரண்டு மாதங்களாக ஒருமித்துப் பணியாற்றி வருவதாகவும், இக்கட்டத்தில் இப்படியொரு சம்பவம் ஏற்படும் என்று எவரும் எண்ணிக்கூடப் பார்க்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார் (பி)

## ஜனாதிபதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும், நியாயமான தீர்வு ஏற்படும் என்பதில் தமக்கு நம்பிக்கை இருப்பதாகவும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அப்போது தெரிவித்திருந்தார்:

## இன்று பூரண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று ஸ்தாபனங்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

யாழ்ப்பாணம் வர்த்தக சங்கம், யாழ். சிப்பந்திகள் சங்கம், யாழ் வகுப்புத் தொழிலாளர் சங்கம் ஆகியவை இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன. (க)

## ரெலோ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

3 ம் திகதி நடைபெற்ற நிகழ்வு மிகவும் அராஜக முறையாகும். இனிமேலும் இப்படியான சம்பவங்கள் நடைபெறுவதை நாம் வன்மையாக எதிர்க்கிறோம்.

'எந்த இயக்கம் இதனைச் செய்தாலும் படுகொலைக்கான காரணம், செய்த குற்றம் ஆகியவற்றுக்கு உரிமைகோரி மக்களுக்கு விளக்கம் தரும்படி பணிக்கின்றோம்'

இதுசம்பந்தமான சுவரொட்டியும் யாழ். குடா நாட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

### உரிமை கோருமாறு கோரிக்கை

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் எம். பிக்களில் இருவர் சுடப்பட்டுக் கொல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டதற்கு உரிய காரணத்தைத் தெரிவித்து உரிமை கோருமாறு 'தமிழீழ மாணவர் பேரவை (ரெஸோ) சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (மா]

## 4ம் கட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கலைக் கழக மாணவர்களும் பொதுமக்களும் இணைந்து கருத்தரங்கொன்றை நடாத்தினர்.

நான்காம்கட்ட உண்ணாவிரதத்திற்கு பங்குபற்ற 50க்கு மதிகமானோர் முன்வந்த போதும் 22 மாணவர்களே அனுமதிக்கப்பட்டனர்:

பல்கலைக் கழக மாணவர்களின் உண்ணாவிரதத்திற்கு ஆதரவுதெரிவித்து ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொள்ள வருவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துவருவதாகவும் அவர்களுக்கு மறுப்புத் தெரிவிக்க முடியாதிருப்பதாகவும் இடப்பிரச்னை காரணமாகவே அதிகமானோரை அனுமதிக்க தடையாக விருப்பதாகவும் உண்ணாவிரதக் குழுப்பிரதிநிதி பொருவர் கவலை தெரிவித்தார்.

கச்சேரி பஸ் நிலையம், யாழ். பெரியகோயில், துன்னாலை, கொடிகாமம், வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களிலும் ஒருநாள் அடையாள உண்ணாவிரதமும் கருத்தரங்குகளும நடைபெற்றது: [ச.

### உயிலங்குளம்:

# ஒருவர் பலி

(வவனியா)

உயிலங்குளம் பகுதியில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த இருவர்மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானதாகவும் மற்றவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது: (இ-மா)

## கடை எரிப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

நேற்றுக்காலை 5 மணியளவில் திருமலை நகருக்கு வந்த ஆயுதம் தாங்கிய கோஷ்டியினர் தமிழர்களின் கடைகளுக்கும் வீடுகளுக்கும் தீவைக்கத் தொடங்கினர். பல கடைகள் எரிந்து சாம்பரானது.

இக்கோஷ்டியினர் கடைகளில் இருந்தவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் மூவர் பலியானார்கள் இதில் சிவபாதம் (35 வயது) என்பவர் நகைக்கடை ஒன்றின் வேலையாளர் அவரது சடலம் கடற்கரை வீதியில் வைத்து எரிக்கப்பட்டது. மடத்தடியைச் சேர்ந்த கிருஷ்ணன் என்பவரும் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியானார்.

திருமலை 10 ம் நம்பரிலுள்ள சுமார் முப்பது வீடுகள், திருகோணமலை நகரிலுள்ள வடக்கு கடற்கரைவீதி, மத்திய வீதி, பிரதான வீதி ஆகியவற்றிலுள்ள சுமார் முப்பது கடைகள் முற்றாக எரிக்கப்பட்டுள்ளன.

வீடுகள் எரிக்கப்பட்டதால் சுமார் 4 ஆயிரம் தமிழர்கள் அகதிகளாகியுள்ளனர்.

இவர்கள் திருமலையிலுள்ள முஸ்லிம்கல்லூரி, சென். ஜோசப் கல்லூரி மற்றும் ஆலயங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

உப்புவெளி கிராமத்திலுள்ள தமிழர்களும் அகதிகளாகி வேறிடங்களுக்குச் சென்றுள்ளனர்.

இது இவ்வாறிருக்க திருமலையிலுள்ள சிறீமாபுரத்தில் தமிழ்த் தீவிரவாதிகளுக்கும் ஊர்காவல் படைகளுக்குமிடையில் பலத்த மோதல் ஏற்பட்டதாகவும், ஊர்காவல் படையினரின் ஆயுதங்கள் அபகரிக்கப்படதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அங்குள்ள வீடுகளுக்கும் குடியிருப்பாளருக்கும பலத்த சேதம் ஏற்பட்டதாக அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் தொண்டர் படை வாகனமொன்று சென்றுகொண்டிருந்த பொழுது கண்ணிவெடியில் சிக்கியதால் வாகனம் சேதமடைந்ததுடன் அதில் சென்றவர்களுக்கு உயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது

இச்சம்பவங்களைத் தொடர்ந்து கொழும்பு-மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கும் திருகோணமலைக்குமிடையேயான ரயில், பஸ் போக்குவரத்துச் சேவைகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளன.

இதேநேரத்தில் கிண்ணியாவில், நேற்று கண்ணிவெடிக்கு இராணுவச் சிப்பாய்கள் மூவர் பலியானதாகவும், சிலர் காயமடைந்ததாகவும் நேற்று அரசதரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சிறிமாபுரத்திலும் இதே மாதிரி கண்ணிவெடிச் சம்பவம் நிகழ்ந்ததாகவும் இராணுவ சிப்பாய்கள் சிலர் சிறு காயமடைந்ததாகவும் அதே நேரத்தில் இராணுவத்தினர் திருப்பிச் சுட்டதில் தீவிரவாதிகள் இருவர் பலியானதாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது

# கச்சேரி உண்ணாவிரதத்தில் 2 ஆயிரம் பேருக்கு மேல் கலந்து கொண்டனர்

(எம். ரி. சந்திரகுமார்)

வெலிக்கடைச் சிறையில் 26 வது நாளாக மரணத்தின் பிடியில் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து நேற்று முன்தினம் பல இடங்களில் உண்ணாவிரதப் போராட்டங்கள் நடைபெற்றன.

கச்சேரி பஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான உண்ணாவிரதத்தில் 2000க்கு மதிகமானோர் காணப்பட்டனர். ஹோமியோபதி பிரபல டாக்டர் பி. சிதரன் தாம் தொடர்ந்து 4 தினங்கள் உண்ணாவிரதமிருக்க போவதாக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஆயுதமேந்திப் போராட்டம்; நடாத்துவது எல்லோராலும் மேற்கொள்ள முடியாத செயலாகும் இவ் உண்ணாவிரதங்கள் மூலமாகவே நாங்கள் எமது ஆதரவை வழங்க முன்வந்திருக்கிறோம். இதன் வலிமையை இன்றைய இலங்கை அரசாங்கம் உணராவிட்டாலும் ஏனைய நாடுகளுக்கு எமது இக்கட்டான நிலையை தெரியப்படுத்து உதவும் எனக் குறிப்பிட்டார்.

இவ்வுண்ணாவிரதத்தில் சுண்டுக்குளி மகளிர் உயர்கல்லூரி, பரியோவான் கல்லூரி, பாஷையூர் சென் அன்ரனிஸ், கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் வேம்படி மகளிர் கல்லூரி, வைத்தீஸ்வரா வித்தியாலயம், கொக்குவில் டிப்ளோமா பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த மாணவ மாணவிகள் சிறுகுழுக்களாக கறுப்புப்பட்டி அணிந்தவண்ணம் சுலோகங்களுடன் காணப்பட்டார்கள் உண்ணாவிரதம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஹெலிகொப்டர் தாழப்பறந்து நிலைமை அவதானித்துக்கொண்டிருந்தது.

கச்சேரி கிழக்கு ஸ்ரீ ஞானவயிரவ ஆலய முன்றலிலும் நடைபெற்ற ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தில் ஆண்கள் பெண்கள் சிறுவர், சிறுமியர் உட்பட 1000 க்கு மதிகமானோர் பங்கு பற்றியிருந்தனர். கரைச்சிதினம் மகா வித்தியாலயம், நல்லூர் தெற்கு வித்தியானேஸ்வர வித்தியாலயம் ஆகியவற்றை சேர்ந்த மாணவ மாணவிகளும் இவ் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர். நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் உண்ணாவிரதம் முடிவடைந்ததும் தொடர்ந்து சமாதான நீதவான் திரு கே. இராசையா தலைமையில் பொதுமக்களால் கருத்தரங்கு ஒன்றும் நடத்தப்பட்டது.

மற்றும் மாதகல், உரும்பிராய், கொழும்புத்துறை காரைநகரில் ஐந்து இடங்களிலும் உண்ணாவிரதம் நடைபெற்றதாக செய்தி வந்துள்ளது.

### உண்ணாவிரதம் 4-ம் கட்டம்

இது இவ்வாறிருக்க யாழ். பல்கலைக் கழக 3ம் கட்ட உண்ணாவிரதம்நேற்றுபு தன்கிழமை மாலை 5மணிக்குமுடித்து வைக்கப்பட்டு அதே சமயம் 4 ம் கட்ட உண்ணாவிரதம் ஆரம்பித்துவைக்கப்படுமென உண்ணாவிரதிகள் குழுப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார் 4ம் கட்ட உண்ணாவிரதத்தில் 20 மாணவர்கள் கலந்து கொள்ளவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்

நேற்று மூன்தினம் பல்கலைக்கழக மாணவர்கள் உண்ணாவிரதத்திற்கு ஆதரவு தெரிவித்து இருபதுக்கு அதிகமான பொதுமக்கள் ஒருநாள் அடையாளஉண்ணாவிரதத்தில்கலந்து கொண்டனர் இதில் அதிகமானோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தினமும் யாழ் பல்கலைக் கழகத்தில் உண்ணாவிரதம் இருக்க வரும் பொதுமக்களின் தொகை அதிகரித்துவருவதாகவும் இடப்பிரச்னை அதற்குத் தடையாகவிருப்பதால் உண்ணாவிரதமிருக்கப் பொதுமக்கள் முற்கூட்டியே தம்முடன்தொடர்பு கொள்ளுமாறு உண்ணாவிரத போராட்டக் குழு தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(ச)

## செம்பி தோட்ட ஞானவைரவராலயமும் பஜனை மன்றமும்

முந்தகாலத்தில் ஆந்திரேர் களிலும் மரநிழல்களிலும் வைரவர் வழிபாடுகள் சிறப்புற நடந்துள்ளன. இன்று ஒவ்வொரு கிராமத்தின் மத்தியிலும் காவல் தெய்வமான வைரவப் பெருமானுக்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்வதைக் காணலாம் இவ்வாறே அராலி மத்தியிலும் வைரவப் பெருமானுக்கு ஆலயம் அமைத்து பெருமானின் பெருங்கருணையைப் பெறுவது சிறப்பாக அமைந்துள்ளது இவ்வாலயம் அராலி தெற்கு செம்பியன் தோட்ட ஞானவைரவர் ஆலயம் என்று அழைக்கப்படுகிறது.

இவ்வாலயத்தின் ஆரம்பம் எப்பொழுதுதான் என்று யாரும் அறுதியிட்டுக் கூற முடியாது. தனியாரின் காணியில் ஒரு சிறு வழிபாட்டுத் தலமாக அமைந்த இவ்வாலயம் ஆசாரமுறைப்படி முழுக்க முழுக்க புதிதாக அமைக்கப்பட்டு விளங்குகிறது காரப்கிருகம் முதல் சுற்றுமதில் சகல புதிதாக அழகும் பொலிவும் பெற்று விளங்குகிறது குறுகியகால வளர்ச்சியில் ஊர்பிரச்ச மக்கள் போற்ற வளர்ந்தன இவ்வாலயத்தின் வரலாற்றுப் பின்னணியில் ஆலய அயலில் வாழ்ந்து வரும் இளைஞர்களின் ஆற்றலும் ஊக்கமும் பக்தியும் பின்னிப்பிணைந்திருக்கிறது

இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு ஒரு பஜனைமன்றம் வேண்டுமென இளைஞர்கள் விரும்பி 1963-ல் ஆரம்பித்தனர். அன்று தொட்டு இவ்வாலயத்துக்கு மணிகோபுரம் திருமஞ்சனக்கிணறு, பலமண்டபங்கள், மடைப்பள்ளி என்பன காலத்தோறும் இக்கிராம மக்களின் பொருளுதவி பெற்று அமைத்தனர் இவர்கள் ஆலய வளர்ச்சியுடன் கலைகளையும் வளர்த்துள்ளனர். ஆண்டு தோறும் மகா சிவராத்திரி யன்று பக்திச் சுவையூட்டும் நாடகங்களும், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பண்ணிசை வகுப்புகளும் சொற்பொழிவுகளும் சிறுவர்களிடையே உணர்வு பெறும் பொருட்டு பேச்சு போட்டிகளும் வைத்து வளர்த்தனர் என்றும், அவர்கள் ஆற்றல் எம்பெருமான் ஞானவைரவர் கொடுத்தன்றோ

இவ்வாலயம் புனருத்தாரண கும்பாபிஷேகம் விரைவில் நிகழவிருப்பது சைவமக்களை வருக்கும் மகிழ்ச்சியான நிகழ்ச்சியாகும்.

— பொ. சிவராசா




இன்பக்கனவு கண்டு இனிதுவக்கும் வேளையிலே... துன்பக்கனவொன்று சிந்தையிலே தட்டியது!

இலங்கையில் நடந்த இனக்கலவரத்தின் எதிரொலியாக இராமேஸ்வரம் 'குட்டி இலங்கை'த் தீவானது ஒரு கதை என்றால்... இலங்கையிலிருந்து இராமேஸ்வரத்துக்கு இனிமேல் கப்பல் ஓடாது என்ற பயங்கர நிலையில் தமது உறவினர்களை எப்படியும் பார்த்துவிடவேண்டும் என்ற துடிப்பில் படகொன்றில் பலர் ஏறி கடலில் மூழ்கிய கதை... இது ஒரு தொடர்கதை!

''இலங்கையில் இனக்கலவரமாம். இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு கப்பல் புறப்படமாட்டாதாம். யாத்திரிகர்களோ, பிரயாணிகளோ இனிமேல் கடல் மூலம் கப்பலில் பிரயாணம் செய்ய முடியாதாம்...'' என்று வெளியான அறிவிப்பினால் அந்தரித்த பல நூற்றுக்கணக்கான மக்கள், இராமேஸ்வரம் கடற்கரையில் பசி, பட்டினியால் உழன்று பாதயாத்திரையில் சென்றுவந்து இலங்கைக்கரையை அடைந்து இனபந்துக்களை பார்க்க வேண்டுமென்று பரதவித்த காட்சி என்கண்முன் இன்றும் நிழலாடுகிறது.

பாலைவனத்தில் ஓர் நீரூற்றைக் கண்டதுபோல, மீன்பிடிப்படகில் இலங்கைக்கு செல்லலாம் என்று சிலர் கூறவே அந்த ஆசை வார்த்தைகள்...

அங்கு பரிதவித்த பிரயாணிகளுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது மீன்பிடிப்படகை நம்பி பலர் பிரயாணம் செய்யத் தயாரானார்கள்.

5-9-1983 இரவு 9 மணிக்கு அந்தப்படகு 32 பிரயாணிகளுடன் இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கரையை நோக்கி புறப்பட ஆயத்தமானது தங்கள் இனசனத்தை எப்படியும் பார்க்க வேண்டுமென்ற உணர்ச்சியின் தூண்டுதலால் செல்ல ஆயத்தமானவர்களை நானும் ஒரு நண்பரும் மார்பளவு நீரில் கடலில் நடந்து சென்று மீன்பிடிப் படகில் ஏற்றி உதவி செய்தோம். அந்தப் பிரயாணிகளுள் என் ஆருயிர் நண்பர் ஒருவரின் பெற்றோரையும் அண்ணனையும் தங்கையையும் படகில் ஏற்றிவிட்டது என் நண்பனுக்குச் செய்த பெருங் கைமாறாக எண்ணி மனநிறைவுற்றேன்.

படகு புறப்பட்டது. நாமும் எமது விடுதியை அடைந்தோம். தூங்கமுயற்சித்தேன்- தூக்கம் வரவில்லை இலங்கையை நோக்கி புறப்பட்ட அந்தப்படகு எந்தவித அசம்பாவிதமும் இன்றி கரையை அடைய வேண்டும் என்ற சிந்தனையில் மூன்று மணி நேரமாக நித்திரா தேவியுடன் போராடிக் கொண்டிருந்தேன்.

திடீர் என்று என்விடுதி அறைக்கதவையாரோபலமாக தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தேன் படகில் சென்ற என்நண்பனின் அண்ணன் நடுங்கிய நிலையில் நின்றான்! அவனைக் கண்டதும் நான் பேரதிர்ச்சிக்குள்ளானேன்! பேசமுடியாத நிலையில் அவன் பேசினான்,

''நாங்கள் புறப்பட்ட சிறிது நேரத்தில் எங்கள் படகுக்குள் தண்ணீர் உட்புகுந்தது. எங்களுக்குப் பயமாக இருக்கிறது படகை திருப்பி இராமேஸ்வரம் கொண்டு செல் என்று பலர் வேண்டினர். வேண்டுதலுக்கு அவன் செவிமடுக்கவில்லை இரண்டு மைல் தூரம் சென்றதும் படகுள் நீர் நிறைந்ய தொடங்கியது இயந்திரமும் தன் செயற்பாட்டை இழந்துவிட்டது. படகு சிறிது சிறிதாக கடலில் தாழ ஆரம்பித்தது. இக்கட்டத்தில் படகோட்டியாக வந்தமூவர் திடீர் என்று கடலில் குதித்து தங்கள் உயிரைக் காப்பாற்ற நீந்திச்சென்றதைக் கண்டேன் நீச்சல் தெரிந்த சிலர், நீந்திச் சென்றனர். தந்தையை நோக்கி, 'அப்பா தங்கையை என்னோடு அனுப்புங்கள். நான் எப்படியாவது கரைகொண்டு போய்ச் சேர்ப்பேன்'' என்று கேட்டேன். தங்கையோ வர மறுத்துவிட்டாள் அப்பாவையும் அம்மாவையும் விட்டுவர மாட்டேன் என்று கதறினாள் தந்தையோ என்னைப்பார்த்து 'நீ உன் உயிரைக்காப்பாற்று நீரில் குதி நீந்து இறைவனிடம் மன்றாடு. பிழைத்தால் மீண்டும் சந்திப்போம்'' என்று கதறி அழுதார் இதயத்தைக் கல்லாக்கி கடலில் குதித்தேன். நீந்திக்கரை சேர்ந்தேன்...'' என்று அழுதான்.

உடனடியாக அவனைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றோம் காவல் நிலையத்தாரிடம் நடந்தவற்றை விபரித்தோம். அவர்கள் எங்கள் அவலநிலையைக் கவனிப்பதாக இல்லை சுங்க இலாகாவுடன் தொடர்புகொள்ளும்படி கூறினார்கள் எங்களுக்கு ஆத்திரம் எல்லை மீறியது. சுங்க இலாகா இருப்பிடத்தை அறிந்து ஓடினோம். அதிகாரிகள் துறைமுகக் கடமைக்காகச் சென்றுள்ளதாகச் சொன்னார்கள் துறைமுகம் நோக்கி ஓடினோம் சுங்க அதிகாரிகளுடைய ஜீப் எங்களை எதிர் நோக்கி வந்துகொண்டிருந்தது ஜீப்பை நிறுத்தி நடந்த சம்பவத்தைக் கூறினோம்.

நீங்கள்போய் காப்பாற்றாது விட்டாலும் எங்களுக்காவது படகைத் தாருங்கள் அல்லது வேறுபடகில் போய் அவர்களைக் காப்பாற்ற அனுமதி தாருங்கள் என்று மன்றாடினோம் படகில் அவர்கள் போவதாகவும். வேறுபடகில் எங்களைச் செல்லுமாறு அனுமதி தந்தார்கள் இரண்டு மைல் தூரம் நண்பன் குறிப்பிட்ட இடத்தை நோக்கி படகில் விரைந்தோம், அப்பொழுது நேரம் அதிகாலை 3-00 மணி தாழ்ந்த படகின் முனையைத் தழுவியவாறு ஐவர் தொங்கிய நிலையில்இருந்தனர் அவர்களைக் கண்டு பேரதிர்ச்சி அடைந்தோம். இன்னும்சிறிது நேரம் தாமதித்திருந்தாலும் அவர்களின் பிணத்தைக்கூட காணமுடியாதிருந்திருக்கும். அவர்களைப் படகில் ஏற்றி. வேண்டிய முதலுதவியைச் செய்து கரைக்கு கொண்டுவந்தோம். தப்பிய ஐவரில் என் நண்பனின் தந்தையும் ஒருவராவார்,

இப்படியாக பன்னிரெண்டு பேர் உயிர் பிழைத்தனர். இறந்தோர்இருபதுபேர். இவர்களில் ஐவருடைய சடலங்கள் கடலில் கண்டுபிடிக்கப்பட்டன: இராமேஸ்வரத்தில் ஆயிரக்கணக்கில் இலங்கையர் இருந்தும் அறுபேர் மட்டும் சடலத்தை அடக்கம் செய்ய உதவினர்! சடலத்திலிருந்து ஊனம் வடியவடிய ஒவ்வொருவரும் ஒவ்வொரு சடலத்தை தூக்கிச்சென்றோம் மயானத்திற்கு! மயானத்திற்கு சென்ற பின்னர்தான் தெரிந்தது அங்கு மாபெரும் இரங்கற் கூட்டத்திற்கு ஒழுங்கு செய்திருந்தது! சடலத்தைத் தூக்கிச்சென்ற நாங்கள் அறுபேருமே குழிவெட்டி புதைத்தோம். அப்போது தான் கட்சிப்பிரமுகர்களும், உயர்காவல் அதிகாரிகளும் சுங்க அதிகாரிகளும் வாகனம் மூலம் வந்திறங்கினர் கூட்டம் ஆரம்பமானது பிரமுகர்களும் அதிகாரிகளும் உரையாற்றினர் இலங்கையர் சார்பில் என்னைப்பேச அழைத்தனர்; காரசாரமாக நடந்தமுழு விபரத்தையும் அங்குள்ள அனைவரது நெஞ்சிலும் உறுத்தும் வண்ணம் ஒன்றும் விடாமல் என் இதயக்குமுறலுடன் எடுத்துரைத்தேன்! அப்போது தான் என் ஆத்திரம் ஓரளவு அடங்கிற்று!

## இலங்கை வேந்தன்

## யாருடையது?

கோண்டாவிலைச் சேர்ந்த திரு. ஏ வாமதேவன் என்பவர் ஒரு பெரிய இரும்புத் திறப்பினை ராஜா தியேட்டர் முன் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர் ஏ. குணரத்தினம், உபதலைவர் எம் புத்திரசிகாமணி. செயலாளர் பி. கந்தசாமி, உபசெயலாளர் பி டி. சற்குணராசா, பொருளாளர் வை ஜெயக்குமார். உபபொருளாளர் எஸ். வி. சிவகுமாரன் அத்துடன் செயற்குழுவொன்றும் தெரிவாகியது,

(ச)

## கொள்ளை

(யாழ்ப்பாணம்)

வவனியா சிற்றி றைஸ்மில் உரிமையாளர் வீட்டிலிருந்து பெறுமதி வாய்ந்த ரேப்றைக் கோடர் செற் ஒன்றும் ஒரு சோடி சப்பாத்தும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

பெறுமதிமிக்க கொள்ளையடிக்கப்பட்ட ரேப்றைக்கோடரின் 10 500 ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது. (ச)

நியூ சினிமாலயா
[R. G பில்டிங் மேல்மாடி]
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
NEW YORK NIGHTS
(வயது வந்தோர் மட்டும்)

பாலகன் V.V.
(சாந்தி முன்பாக)
Daily 5 Shows
The
Blue Lagoon
Adults only

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி
அருகாமை
10-30, 12-30, 2-30. 4-45
BLOODY AVENGER

மே'பெயர் மினி
சினிமா
(கன்னாதிட்டி காவிசேரவில் அருகில்)
10-30. 2-15, 5-15
சந்திரசேகர் - அம்பிகா
நடித்த
நாகம்
பாம்பினதும் நாயினதும்
சாகசம் நிறைந்த படம்

ஸ்ரான்லி மினி
"K" திரைவரிசில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
California
Girls
அமெரிக்க பெண்களின்
பொழுது போக்குகளும்
சிறந்த பாடல்களும்
நிறைந்த படம்.
Adults only

வெலிங்டன்
10-30, 2-15, 4-15, 6-30, p.m.
26 ம் திகதி மட்டும்
THE STUNT MAN
பயங்கர காட்சிகள் நிறைந்த முதல்படம்.
யாழ்ப்பாணத்தில்

விஜேய மினி
10-30, 2-30, 6-30
8-வது மாதமாக
ஓடுகிறது!
சிவகராஜன்,
சிவச்சந்திரன்,
பூர்ணிமா ஜெயராம்,
சில்க்சுமிதா, ஜெய்சங்கர்
நடித்த
ராஜு மகேந்திரரவின்
நீங்கள் கேட்டவை
சங்கர்கள் கனி

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, 4-30, 7-00
Private-Lessons
15 வயது பணக்கார சிறுவனின் teenage ஆசைகளை பயன் படுத்தி பணம்பறிக்கும் நன்றி மறந்த கார் றைவர்பாலியல் ஆசையை தூண்டி சிறுவனை கெடுக்கும் வேலைக்காரப் பெண் ஏதும் அறியா கெடுக்கப்பட்ட சிறுவன் வேலைக்கார பெண்ணை மானசீகமாக காதலிக்கும் விபரீதம் teenage வயதில் இளைஞர்கள் செய்யும் குறும்புகள்.
(கண்டிப்பாக வயது வந்தோருக்கு மட்டும்.


# இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி 20 (1985-9-5)
கிழமை: வியாழன்
திதி: ஷஷ்டி பின்இரவுவரை
நக்ஷத்திரம்: பரணி பிற்பகல் வரை.

மேடம்: புதிய இடங்களிலிருந்து உங்களுக்கு ஆதரவு வளரும். எதிர்பார்த்தவர்களே உங்கள் நண்பர்களாவார்கள். பிறருக்கு உதவுவதில் மகிழ்ச்சியடைவீர்கள்.

இடபம்: தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவை தாராளமாகப் பெறுவீர்கள். குடும்பத்தில் இனிமையான சம்பவம் உண்டு.

மிதுனம்: சந்தர்ப்பத்திற்கு ஏற்றவண்ணம் பொருள் தாராளமாகக் கிடைக்கும். சகோதரவழிச் சஞ்சலம் ஏற்படும். தற்பெருமையை தவிர்த்துக்கொள்ளவும்.

கடகம்: பந்தபாசம் உங்களை பரவசப்படுத்தும் உறவினர் சகாயம். கல்வித்துறையில் அதிக ஈடுபாடும் ஏற்படும்.

சிங்கம்; இனிமை பயக்கும் தினம். இன்று அன்பர்கள் ஆதரவு கிடைக்கும். பொது மக்கள் மத்தியில் மதிப்பு உயரும். உற்சாகம் பிறக்கும்.

கன்னி: சூழ்ச்சிகளை விரிக்கும். வழக்கு விவகாரம் ஏற்படும். வீண் செலவு உண்டு தெய்வ நம்பிக்கை நன்று.

துலாம்: குடும்ப வாழ்வில் மனதுக்கு நிம்மதி பிறக்கும். நீண்டநாள் பூமிப் பிணக்கு சமரசமாக முடிவடையும். காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு.

விருச்சிகம்: திரை மறைவில் சதித்திட்டம் உருவாகும். அடுத்துக்கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர். சிலருக்கு நூதன ரோகம் தென்படலாம்.

தனுசு; அன்புக் கரங்கள் அணைக்கும் அதிஷ்ட தேவதையின் பார்வையும் பதியலாம். தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவும் கிடைக்கும்.

மகரம்: கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும். எதையும் துரிதமாகச் செய்யின் வெற்றி காண்பீர்கள். சிலருக்கு நன்மையான இடமாற்றமும் ஏற்படலாம்.

கும்பம்: புதிய தொழில் மூலம் இலாபம் கிடைக்கும், புத்திரர்களுடைய செல்வாக்கு பெருகும். புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும்.

மீனம்: அதிகாரக் குறைவிற்கு இடமுண்டு. அபாயகரமான தொழில்களில் ஈடுபடுபவர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

திருமலை

- வே. ரவீந்திரன் -

# 'தமிழீழம் அமைப்பதைஎந்த சக்தியாலும் தடுக்கமுடியாது!'

## சந்திரகாசன் கூறுகிறர்

(கொழும்பு)

''தமிழ்மக்கள் எந்தநோக்கத்துக்காக வாக்களித்தார்களோ அந்த நோக்கத்திலிருந்து நான் விலகமாட்டேன் தமிழீழத்தை அடைவதே எமது இறுதிஇலட்சியமாகு''மென்று திரு சந்திரகாசன் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று முன்தினம் ''ஈழநாடு''க்கு தொலைபேசி மூலம் அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது: ''அடாது மழை பெய்தாலும் நாம் விடாது முயற்சி செய்வோம். எமது போராட்டம் ஓர் உயிர் போராட்டமாகும். அதனை நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம். தமிழ் மக்கள் தமிழீழத்தை அமைப்பதனை எந்தச் சக்தியாலும் தடுக்கமுடியாது. இதனையிட்டு மக்கள் தெம்புடன் இருக்க வேண்டும்.

தமிழீழத்துக்காக பலர் தமது உயிரைத் தியாகம் செய்துள்ளார்கள். இந்த நிலையில் நாம் தமிழீழ போராட்டத்தை எப்படி கைவிடமுடியும்.

''தமிழ் தலைவர்களை நாடு கடத்தியது தவறானது என்பதனை இந்தியா உணர்ந்துள்ளது, பாலசிங்கம் மீதான நாடு கடத்தல் உத்தரவு விரைவில் வாபஸ் பெறப்படுமென நம்புகிறேன். திரு. சத்தியேந்திராவனு ஒன்றை இந்திய அரசாங்கத்துக்கு சமர்ப்பிக்கும் பட்சத்தில் அவர் மீதான நாடுகடத்தல் உத்தரவும் வாபஸ் பெறப்படும் என எதிர்பார்க்கிறேன்.

''இலங்கையில் இனப்படுகொலை நடக்கும் வரை பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால் இலங்கையில் இந்த இனப்படுகொலையைத்தடுக்க இந்தியா முயற்சி செய்கிறது.

''பேச்சுவார்த்தைகளினால் எவ்வித பலனும் ஏற்படும் என்று நாம்நம்பவில்லை. ஆனால் இந்தியாவின் முயற்சிக்கு நாம் தடையாக இருக்க மாட்டோம்'' என்றும் அந்தபேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

## இன்றைய இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீகத் தமிழிசை விழாவின் 7-வது நாளாகிய இன்று திரு. நாக. பரமசாமி இன்னிசை வழங்கவிருக்கிறர்.

நல்லைக்கந்தன் உற்சவத்தை யொட்டி நாவலர் சபை ஆதரவில் இவ்விழா நடைபெற்று வருவது அறிந்ததே. (ச)

## இன்று

(யாழ்ப்பாணம்)

பிரபல புல்லாங்குழலிசை வித்துவான் செல்வநாயகம் (அரியநாயகம்) அவர்கள் அமரத்துவம் எய்திய முதலாண்டின் நினைவுகூருமுகமாகஇன்று மாலை நல்லையாதீனத்தில் செல்வன் செல்வநாயகம் தயாபரன், செல்வன் மதனகரன் தயாபரன் ஆகியோரின் புல்லாங்குழலிசை நிகழ்ச்சி யாழ். பல்கலைக்கழகசமஸ்கிருதத் துறைத் தலைவர் திரு வி. சிவசாமி எம், ஏ. தலைமையில் நடைபெறும்.

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

''மூத்தவிநாயகர் திருவந்தாதி'' நூல்வெளியீட்டுவிழா இன்று பி. ப. 2 மணிக்குநல்லை ஆதீனத்தில் யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் வ. B. சிவராசா தலைமையில் நடைபெறும்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் அருளாசியுரையும் வித்துவான் க. சொக்கலிங்கம் வெளியீட்டுரையும் திருமதி வசந்தா வைத்தியநாதன் அறிமுகவுரையும் கல்வியதிகாரி க சோமசுந்தரம், திரு. சு. இராசநாயகம், நல்லூர் வட்டாரக்கல்வி யதிகாரி சு. சிவநாயகமூர்த்தி யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன் ஆகியோர்மதிப்புரைகளும் வழங்குவார்கள். அரியாலைக் கவிஞர் நாக. பரமசாமி நூலினை ஆக்கியுள்ளார்.

# தமிழர் தலைவர்களை நாடு கடத்தியதை கண்டித்து பெங்களூரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(பெங்களூர்)

தமிழீழத் தலைவர்களான திரு. பாலசிங்கம், திரு. சத்தியேந்திரா ஆகியோர் நாடு கடத்தப்பட்டமையைக் கண்டித்து பெங்களூர் தமிழர்களும் தமிழீழ ஆதரவாளர்களும் பெங்களூர் ராஜ் பவனுக்கு மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள்.

கடந்த 1ம் திகதி இடம்பெற்ற இந்த ஊர்வலத்தில் அதிகளவில் பெண்களும் கலந்துகொண்டனர்.

ராஜ்பவனுக்கு ஊர்வலமாக சென்ற இவர்கள் கர்னாடக கவர்னர் திரு. ஏ. ஏ. பெனுர்ஜியிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இந்த மகஜர் இலங்கை இனப்படுகொலையைக்கண்டித்து இரத்தத்தால் எழுதப்பட்டிருந்தது.

கர்னாடக தமிழர் சம்மேளனம் இந்த ஊர்வலத்தைநடத்தியது.

## விபரக்கொத்து சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள மூன்று வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு நோய் தடுப்பு மருந்து கொடுப்பதற்கான விபரக்கொத்தொன்று. வீடு வீடாக எடுக்கப்பட்டு வருகின்றன. இச்செயல்திட்ட நடவடிக்கையில், அவ்வப்பகுதியிலுள்ள, பொதுச்சுகாதார பரிசோதகரும், கோப்பாய் மூலவள நிலையத்தில் பயிற்சியை மேற்கொண்ட மாணவிகளும். இவ் ஆய்வினை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாய்வு புத்தூர், ஆவரங்கால். நவற்கிரி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வறிக்கையைக் கொண்டு. இப்பகுதிகளில் உள்ள குழந்தைகளுக்கு நோய் தடுப்பு மருந்து கொடுக்கும் பணி கோப்பாய் கல்வி மூலவள நிலையத்தில் நடைபெறும், இப்பணி கோப்பாய் சுகாதார பரிசோதகர் திரு கே. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறுகின்றன.

இப்பணியினை நடாத்துவதற்கான ஆலோசனைக்கூட்டம் அண்மையில் கோப்பாய் சுகாதார அதிகாரி டாக்டர் ஏ. விஜயரத்தினம் தலைமையில் கோப்பாய் கல்விமூலவளநிலையத்தில் நடைபெற்றது (கெ)

## மன்னாரில்....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பெண் 77 பேருடன் அண்மையில் படகுமூலம்இராமேஸ்வரத்துக்கு அகதியாகச் சென்றுள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்ட 46 பேரில் தமது கணவனும் கொல்லப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாம் அங்கு வாழமுடியாத நிலையிலேயே இந்தியாவுக்கு வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.


உஷா மினி
புதிய வெளியீடு
10-30, 2-30, 4-45, 6-45
Torso
வயது வந்தவர்களுக்கு மட்டும்


## உருக்கமான வேண்டுகோள்

கடந்த 02-09-85 பகல் 11-00மணியளவில் இனந்தெரியாத நபர்கள் சிவப்புநிற கொண்டா C 70 இல.82 Sri 5428ஐ கடத்திச்சென்றுவிட்டார்கள். உடையவர் வயதுசென்ற சட்டத்தரணி தனது வேலைக்குச் செல்லக் கஷ்டப்படுகிறர்; தயவுசெய்து எடுத்தவர்கள் 35, சிவப்பிரகாசம் றேட்டு இல்லத்தில் ஒப்படைக்கவும். (559)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி புவனேந்திரராணி தில்லைநாதன்

மலர்வு:
06-05-1951

உதிர்வு:
06-08-1985



சித்திரத்தில் காண்போம சுகம் செய்து கும்பிடுவோம்
புத்தகத்திற் பாடிப் புகழ்ந்திடுவோம் —பக்தியுடன்
ஆண்டாண்டு தோறுமனக் கழகுவிழா நாமெடுத்து
வேண்டுதல்கள் செய்வோம் விரைந்து.

கணவன், மகள், குடும்பத்தினர்.
மூத்ததம்பி ஒழுங்கை, மானிப்பாய். (521)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## தெல்லிப்பளையில் நடந்த உண்ணாவிரதம்

(மாவிட்டபுரம்)

சிறையில்வாடும் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து தெல்லிப்பழை கீரிமலை பகுதியில் நேற்று முன்தினம் பிரமாண்ட மாபெரும் முறையில் உண்ணாவிரதம் நடாத்தப்பட்டது.

தெல்லிப்பழைச் சந்தியிலுள்ள வீடு ஒன்றில் நேற்றுக்காலை ஆரம்பமான உண்ணாவிரதப் போராட்டத்தில் பாடசாலை மாணவர்களும் மாணவிகளும் பொதுமக்கள் இளைஞர்களும் ஏராளமாக கலந்து கொண்டனர்.

விசேடமாகவில்லுப்பாட்டும் கவிதைகளும் இவ்வுண்ணாவிரதத்தில் நடாத்தப்பட்டன.

கீரிமலை பிரஜைகள் குழுவின் ஒழுங்குப்படி கீரிமலையில் நடந்த உண்ணாவிரதத்தில் பாடசாலை மாணவ மாணவிகளும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன விளையாட்டரங்கில் கடந்தவாரம் நடந்த 2 மணிநேர மறியல் போராட்டத்தில் சுமார் 2000 பேர் வரையில்கலந்து கொண்டனர்.

தமிழ் மக்களின் விடிவை கருத்தில்கொண்டு சகல இயக்கங்களும் ஒருபொதுத்திட்டத்தின் கீழ் இணைந்து செயல்பட வேண்டும் என்ற அங்குநடந்த கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

## வட்டுக்கோட்டையில்

(வட்டுக்கோட்டை)

சிறைவாசிகளின் உண்ணாவிரதத்துக்கு ஆதரவாக வட்டுக்கோட்டை கண்ணகை அம்மன் கோவிலிலும் 1-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

பொதுமக்கள் ஊர்வலமாகச் சென்று உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர் முன்னைநாள் ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் அ அரியரத்தினம் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசினார். இதனைத்தொடர்ந்து மறுநாள் மௌன ஊர்வலமும் நடாத்தப்பட்டது. (ப)

## மாவிட்டபுரத்தில் வெள்ளைக் கொடி

(மாவிட்டபுரம்)

கூட்டணியின் இருதலைவர்களான திரு. வி. தர்மலிங்கம், திரு. ஆ. மு. ஆலாலசுந்தரம் ஆகியோருக்கு அனுதாபம் தெரிவிக்கும்வகையில்மாவிட்டபுரம் சந்தியில் பெரிய அளவிலான வெள்ளைக்கொடி கட்டப்பட்டுள்ளது.

கூட்டணியின் இருதலைவர்கள் மரணமானசெய்தி கேட்டவுடன் கடைகள் பூட்டப்பட்டன, வெள்ளைக்கொடிகள் கட்டப்பட்டன.

நேர—இடமாற்றம்

## மரண அறிவித்தல்

### வி. தர்மலிங்கம்

(முன்னாள் பா. உ.)

மானிப்பாய்த் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வி. தர்மலிங்கம் அவர்களின் இறுதிச்சடங்குகள் இன்று (5-9-85) வியாழக்கிழமை பிற்பகல் 6-00 மணிக்கு கந்தரோடையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று சுன்னாகம் மயானத்தில் தகனஞ்செய்யப்படும். (563)

## மரண அறிவித்தல்

### முருகப்பர் கந்தையா

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் காம்பொன் மேற்கு ஊர்காவற்றுறையில் வசிப்பவருமாகிய முருகப்பர் கந்தையா காலமாகிவிட்டார் இவர் காமாட்சியின் அன்புக் கணவரும், தர்மகுணசிங்கம் ஆசிரியர் (சண்முகநாத மகாவித்தியாலயம், தர்மசிவபாலன் (பிரான்ஸ்), தர்மசீலன் (கனடா), தர்மசோதி (மக்கள் வங்கி, ஊர்காவற்றுறை), ரதி ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாவதி (ஆசிரியை அல்மினா மகாவித்தியாலயம், மன்னார்), காலாராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஜனி, திலீபன், நிலோஜினி, காயத்திரி ஆகியோரின் பேரனும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரிகைகள் 05-09-85 வியாழக்கிழமை 12 மணியளவில் காம்பனில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக்கொள்ளவும். (553)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under ramber B 10036/81 Eelananu P O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389 — 24126

## அன்னையர் முன்னணி ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதம் இருந்துவரும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யக்கோரி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை, அன்னையர் முன்னணி யாழ் நகரில் ஊர்வலம் ஒன்றை நடத்தவிருக்கிறது.

சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பஸ். நிலையத்தில் அன்னையர் முன்னணியின் ஊர்வலம் ஆரம்பமாகும்.

## மறியல்போராட்டம் நடத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடை சிறைச்சாலை உண்ணாவிரதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரியும், பயங்கரவாத தடைச்சட்டத்தை வாபஸ் பெறக் கோரியும் வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழு நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் அலுவலகங்கள். யாழ். பஸ் நிலையம் முன்பாக மறியல் போராட்டம் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

எட்டாம் திகதி ஞாயிறு காலை ஒன்பது மணி தொடக்கம் மாலைவரை உண்ணாவிரதம் அனுஷ்டித்து உண்ணாவிரதிகளுக்கு ஆதரவு தெரிவிப்பதெனவும் கூட்டுக்குழு தீர்மானித்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

## நகை, பணம் கொள்ளை

(கல்வியங்காடு)

கன்னாதிட்டியில் எம். எஸ். மதார் நகைக் கடையில் ஒரு தங்கச் சங்கிலி, 2 சோடி டிஸ்கோ தோடு, 1200 ரூபா பெறுமதியான குறடுகள், 'பிறஷ்' முதலியனவும், 2000 ரூபா பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது, கடையில் ஓட்டைப்பிரித்து இக்கொள்ளை நடத்தப்பட்டுள்ளதாம். இதே கடையின் பின்புறமாகவுள்ள நகை செய்பவர்கள் இருவரிடமும் பணமும் பொருளும் கொள்ளையடிக்கப்பட்டது.

இதே வீதியில் உள்ள ராணி ஸ்ரோர்சில் தங்கச் சங்கிலி சிகரெட் பெட்டிகள், ஜாம் போத்தல்கள் உட்பட 3500 ரூபா பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இக் கடையிலும் ஓடு பிரித்தே களவு நடந்துள்ளதாம்.

இத்துடன் ப. க. பரமநாதன் நகைக்கடையில் முன்புற கதவுப் பூட்டுக்களும், யாவும் உடைக்கப்பட்டிருந்தனவாயினும் கொள்ளை ஏதும் நடக்கவில்லை என்று தெரிகிறது.

## அமைச்சரவையில் ஆராயப்பட்டது

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு வி தர்மலிங்கம், திரு. எம் ஆலாலசுந்தரம் ஆகிய இருவர் படுகொலைகள் பற்றி அமைச்சரவை நேற்று ஆராய்ந்ததாகவும். இவர்கள் தம் கருத்துக்கள் பேச்சுக்களில் மிதவாதத்தைக் கடைப்பிடித்து, சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழர் பிரச்னைக்குத் தீர்வுகாண முயன்றவர்கள் என்றும், ஆனால் அவர்கள் இன்று மரணத்தைத் தழுவிக் கொண்டுவிட்டார்கள் என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் டாக்டர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்று பத்திரிகையாளர்களிடம் கூறினார்

திருகோணமலையில் சிங்களக் கிராமவாசிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டுள்ளதை அடுத்து அங்கு ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

முதலாவது டெஸ்ட் போட்டி—

## வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது!

(கொழும்பு)

இலங்கை-இந்திய கிரிக்கெட் கோஷ்டிகளிடையே கொழும்பு எஸ். எஸ் ஸி. மைதானத்தில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி, வெற்றி-தோல்வியின்றி முடிவடைந்தது.

இந்தியக் கோஷ்டி நேற்றைய ஆட்டத்தில் தேனீர் இடைவேளைக்குப் பின் 2-வது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றது. வெங்சாக்கர் ஆட்டமிழக்காது 98 ஓட்டங்களைப் பெற்றார்.

ருமேஷ் ரட்னாயக்கா சிறப்பாக பந்துவீசி 7 விக்கெட்டுகளைப் பெற்றார்.

இலங்கைக் கோஷ்டி இப் போட்டியில் வெற்றிபெற 11 ஓவர்களில் 123 ஓட்டங்களை எடுக்கவேண்டிய நிலையில் ஆட்டத்தைத் தொடங்கி 9 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 61 ஓட்டங்களை மிக வேகமாப் பெற்றதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இப்போட்டியில் சிறந்த வீரருக்கான பரிசு, இலங்கை வீரர் ருமேஷ் ரட்னாயக்காவுக்கு கிடைத்தது.

நேற்றைய ஆட்டம் மழை காரணமாக இரண்டு மணித்தியாலங்கள் தடைப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஸ்கோர் விபரம்: இந்தியா 218, 251. இலங்கை 347, 61-4.

2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி, நாளை கொழும்பு சரவணமுத்து விளையாட்டரங்கில் ஆரம்பமாகும். (வி)

## லொறிகள் தடுத்து வைக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற மூன்று லொறிகள் மதவாச்சியில் ஒரு கோஷ்டியினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

மற்றும் பத்துக்கு மேற்பட்ட லொறிகள் நேற்று திருப்பி அனுப்பப்பட்டுள்ளன

இந்த லொறிகளில், 'நேரடிப் போருக்குத் தயாரா? சிங்கள மக்கள் பலியாவதை அரசு தடுக்காததேன்? இலங்கைப் பிரச்னைக்கு வெளித்தலையீடா?' என்று சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளது (க)

## வாகனங்களை வழிமறித்துத் தாக்கினார்களாம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் வவனியா வழியாகச் செல்லும் வாகனங்கள் ,யாவும் மதவாச்சிக்கும் புனானைக்குமிடையில் மறிக்கப்பட்டு தாக்கப்படுவதாக தகவல் கிடைத்துள்ளது.

கத்திகள், கோடாலிகள், துப்பாக்கிகள் கொண்ட கோஷ்டியினர் இத்தாக்குதலை நடத்தியதாகவும் இவ்வாறு தாக்குதலுக்குள்ளான வான்சாரதியான பாலச்சந்திரன் என்பவர் பலத்த காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அங்கிருந்து அனுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து வவனியா பிரஜைகள் குழு செயலாளர் டாக்டர் பரராஜசிங்கம் வவனியா இராணுவ இணைப்பதிகாரிக்கும் அநுராதபுரம் பிரதிப் பொலிஸ் அதிபருக்கும் புகார் செய்து உடன் நடவடிக்கை எடுக்கும்படி கோரியுள்ளார்.

பிரதிப் பொலிஸ் அதிபர் அநுராதபுரத்திலிருந்து உடனடியாக ஸ்தலத்துக்கு விரைந்து நிலைமையைக் கட்டுப்படுத்துவதாக டாக்டர் பரராஜசிங்கத்திடம் கூறியிருப்பதாக அறியப்படுகிறது.

## குணரத்தினம் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கடத்திச் செல்லப்பட்ட சீமெந்துத்தொழிற்சாலை முன்னாள் ஆளணிமுகாமையாரும், சிறுபான்மைத்தமிழ் சமூக சேவையாளருமான திரு. சி ஈ குணரத்தினம் நேற்று மாலை அவரது வீட்டிலேயே கொண்டு வந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 21ம் திகதி இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்ட திரு. குணரத்தினம், தம்மை அவர்கள் நல்ல மாதிரிக்கவனித்து சென்றுகொண்டதாகத் தெரிவித்துள்ளார். (மா)

## காண்ஸ்டபிள் விடுதலை

(ஏறாவூர்)

ஏறாவூர் பொலிஸ் நிலையம் கடந்த இரண்டாம் திகதி தாக்கப்பட்டபோது கடத்தப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் வாஹிட் நேற்று விடுவிக்கப்பட்டார்.

டில்லி நகரசபை

## உறுப்பினரும் காவலரும் சுட்டுக்கொலை!

(புதுடில்லி)

டில்லி பெருநகர் சபை (மெட்ரோபோலிட்டன் கவுன்சில்) இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு அர்ஜுன் சிங்கும் அவரது மெய்ப்பாதுகாப்பாளர் திரு. வரிஜேந்திர சிங்கும் நேற்று ஸ்கூட்டரில் வந்த இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தில் மேலும் 6 பேர் காயமுற்றனர்.

## மரணப்பிடியில் 28வது நாள்

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியால் வெளியிடப்பட்டுவரும் 'ஈழம் செய்திப் பலகை'யில் பின்வரும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஈழத்தின் எல்லைப்புறத்தில் புனானையில் கண்ணிவெடியினால் 8 பேர் பலியாகியுள்ளனர். பலத்த சேதமும் ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை கிறிமாடரத்தி பல சிங்களக் குடும்பங்கள் கொலை செய்யப்பட்டுள்ளன. திருகோணமலையில் ஊரடங்கு அமுல்.

தமிழ் கூட்டணி உறுப்பினர் கொலை குறித்து ஈழ தேசிய விடுதலை முன்னணி (ஈ என். எல் எவ்) மறுப்பு தெரிவித்துள்ளது.

வெலிக்கடைப் போராளிகளுக்கு ஆதரவாக நேற்று யாழ் நகரில் தமிழீழ மாணவர் பேரவை TESO) மௌன ஊர்வலம். தென்மராட்சியில் பெருந்தொகையினர் உண்ணாவிரதம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

வெலிக்கடையில் உண்ணாவிரத போராட்டம் 28வது நாள். (மா)